பக்கங்கள்:13 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 தை 16 சனிக்கிழமை 29.01.2022 கதிர் 85

இது ரகசியம் அல்ல!

இனிக் கொஞ்சம் காலத்துக்குப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் திருத்தம் குறித்துத்தான் அரசியல் அரங்கில் அதிகம் பேசப்படும் என்பது திண்ணம்.

இலங்கையின் தற்போதைய அரசமைப்பு 1978இல்–44 ஆண்டுகளுக்கு முன் – 2

# பயங்கரவாதத் தடுப்புச் சட்டத் திருத்தம்; ராஜபக்ஷக்களின் முழு ஏமாற்று நாடகம்

## சுமந்திரன் காட்டம்; ஜெனிவாவுக்கும் உடன் தகவல் மேம்பட்ட விடயம் எதுவும் சட்ட மூலத்தில் இல்லை

கொழும்பு, ஜனவரி 29

கடந்த 43 ஆண்டுகளாக நடைமுறையில் இருக்கும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் மோசமான ஏற்பாடுகளை மாற்றி அமைப்பதாக சர்வதேச சமூகத்திற்கு மீண்டும் மீண்டும் வாக்குறுதி அளித்து வந்த இலங்கை அரசு, அதற்கான திருத்த சட்டமூல வரைவை நேற்று வர்த்தமானியில் பிரசுரித்தது.

"இது ராஜபக்ஷகளின் வெறும் ஏமாற்று நாடகம். இதில் மேம்பட்ட அம்சங்கள் ஏதும் இல்லை. இந்தத் திருத்தங்களின் பின்னரும் மிகமோசமான – கொடூரமான – படு மிலேச்சத்தனமான ஏற்பாடுகளைக் கொண்ட சட்டமாக அது தொடரப் போகின்றது" – என்று காட்டத்துடன் கருத்து வெளியிட்டிருக்கின்றார் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன். 10

## '13' தமிழ் மக்களுக்குத் தீர்வைத் தராது; இந்தியாவுக்குச் சோரம் போகமாட்டோம்

### முன்னணியின் பேரணிக்கு எதிராக மாவை போர்க்கொடி

(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வைத் தராது என்பதில் நாம் தெளிவாக இருக்கின்றோம். இந்த நிலையில் ஒரு கட்சி (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி) எமக்கு எதிராகப் பிரசாரம் செய்வதாக நினைத்து, தமிழ் மக்களைக் குழப்புவதற்காக பேரணிகளை ஏற்பாடு செய்துள்ளது.

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

13 ஆவது திருத்தம் 10



## இருக்கின்றதை முதலில் அமுல்படுத்த வேண்டும்!

### ஸ்ரீகாந்தா வலியுறுத்து

(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

ஒன்றுமே இல்லாமல் இருக்கும் இடத்தில் சட்ட ரீதியாக அமுல்படுத்த வேண்டிய 13 ஆவது திருத்தத்தை முதலில் அமுல்படுத்தினால், அதில் உள்ள சிறிய விடயங்களை என்றாலும் நாம் பெறுவதற்கு முயற்சிக்கலாம். ஆகவே, இருக்கின்றதை முதலில் அமுல்படுத்துங்கள் என்றுதான் கூறுகின்றோம்.

– இவ்வாறு தமிழ்த்தேசியக் கட்சியின் தலைவர் 10

## கஜன்களின் தீர்வுத் திட்டம் என்ன? மக்களை இனியும் ஏமாற்ற முடியாது

### சித்தார்த்தன் எம்.பி. பதிலடி

(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை எதிர்க்கும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸினர் தமிழ் மக்களின் தீர்வாக எதனை முன்வைக்கப் போகின்றார்கள் அல்லது அவர்கள் தீர்வு தொடர்பில் எடுக்கும் முயற்சி என்ன என்று கேட்க விரும்புகின்றேன்.

– இவ்வாறு புளொட் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

13ஆவது திருத்தம் தொடர்பில் தமிழ்க் கட்சிகள், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் தொடர்பில் 10

## பழைய மண்வெட்டியைப் பயன்படுத்தி சிறிய வேலையாவது செய்ய வேண்டும்

### '13' திருத்தம் தொடர்பில் விக்கி கருத்து

(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாது. ஆனால், சிறிய சிறிய அலுவல்களைப் பார்த்துக்கொள்ள முடியும்.

– இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

13 ஆவது திருத்தம் தொடர்பில் தமிழ்க் கட்சிகள், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் தொடர்பில் தெளிவுபடுத்தும் ஊடகவியாளர் சந்திப்பு யாழில் நேற்று நடைபெற்றபோதே அவர் இதனைக் கூறினார். 2

## நீதி அமைச்சுக்கு எதிர்ப்புத் தெரிவித்து முல்லைத்தீவில் உறவுகள் போராட்டம்

(ந.லோகதயாளன்)

நீதி அமைச்சர் அலி சப்ரி தலைமையிலான நீதி அமைச்சின் நீதிக்கான அணுகல் நடமாடும் சேவைக்கு எதிர்ப்பு தெரிவித்து மழையில் நனைந்தபடி காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக நேற்று போராட்டம் மேற்கொண்டனர்.

காணாமல்போனோருக்கான அலுவலகம் கண்துடைப்பு நாடகம், ஓ.எம்.பி. அலுவலகத்தை நிராகரிக்கின்றோம் என்ற கோரிக்கையை முன்னிறுத்தி முல்லைத்தீவு வலிந்து காணாமல் 10

## பூஸ்டர் செலுத்தியவர்கள் மட்டுமே கச்சதீவு ஆலயம் செல்ல முடியும்!



(ந.லோகதயாளன்)

யாழ்.கச்சதீவு அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் மார்ச் மாதம் 11ஆம், 12ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள நிலையில் பூஸ்டர் தடுப்பூசி செலுத்திக் கொண்ட 500 பேருக்கு மட்டுமே அனுமதி வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது 10

## யாழ். நகரை வந்தடைந்தது '13' எதிர்ப்பு வாகனப் பேரணி

(எஸ்.நிதர்ஷன்)

அரசமைப்பின் 13 ஆவது திருத்த சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முன்னெடுத்துள்ள வாகனப் பேரணி நேற்று மதியம் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது.

குறித்த வாகனப் பேரணியானது 2



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு வரப்பட்டது.

அது வந்து சரியாக ஒரு வருடத்தில் 'தற்காலிக ஏற்பாடுகள் சட்ட மூலம்' என்ற பெயரோடு வந்ததுதான் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம். அந்தத் 'தற்காலிக ஏற்பாடு' இப்போது 43 வருடங்கள் கடந்தும், தீர்வு காணப்படாத விவகாரமாகத் நீடிக்கின்றது.

அந்தச் சட்டத்தின் படுகேவலமான ஏற்பாடுகள் குறித்து விவரமாக எழுதுவதானால் ஒரு நூலே எழுதி முடிக்கலாம். மனிதநாகரிகப் பண்பியல்புகளுக்கு ஒத்துவராத மிலேச்சத்தனமான இந்தச் சட்ட மூலத்தை 'பெருமையாக' வைத்துக் கொண்டுதான் பௌத்த, சிங்களப் பேரினவாதம் தனது குரூரக் கைவரிசையைத் தமிழர் மீது கட்டவிழ்த்து வருகின்றது. இந்தச் சட்டத்தில் தங்கி நிற்கும் ஒரு சமுதாயம். தன்னை 'மனித குலம்' என்று அழைப்பதற்கே லாயக்கற்றது என்பதுதான் எனது கருத்து.

பல்லாயிரக்கணக்கான போராளிகளின் வித்துடல்கள் விதைக்கப்பட்ட புதைகுழிகளை புல்டோஸர் கொண்டு கிளறி அழித்த கோரப் பண்பியல்புகளை இரத்தத்தில் கொண்டிருக்கும் ஓரினத்துக்கு, இத்தகைய சட்டங்கள் மேலும் பெருமை சேர்ப்பன. அவர்களின் புத்தர் அவர்களுக்குப் போதித்த பஞ்சசீலம் இதுவோ யானறியேன்...!

சரி, இனி விடயத்துக்கு வருவோம். இந்தச் சட்டத்தின் உண்மை முகம் இன்றைய தலைப்புச் செய்தியிலும் ஆசிரிய தலையங்கத்திலும் விரிவாகக் கையாளப் பட்டிருக்கின்றது.

இந்தச் சட்டத்தை 1979 இல் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தவர் யார் தெரியுமா? அந்த இழுக்கை தமது பெயரோடு சுமந்து நிற்பவர் ஒரு தமிழர். இலங்கையின் நீதி அமைச்சராக இருந்த கே.டபிள்யூ. தேவநாயகம்தான் அவர்.

1977 இல் வடக்கு, கிழக்கில் தமிழீழத்துக்கு தமிழ் மக்களின ஆணை கேட்டு தமிழர் விடுதலைக் கூட்டணி பொதுத் தேர்தலில் குதித்தபோது, அது பறி கொடுத்த ஒரேயொரு ஆசனம் கல்குடா தொகுதிதான். அங்குதான் கூட்டணியின் சம்பந்தமூர்த்தியை ஆக ஐந்நூறு வாக்குளால் வென்று எம்.பியானார் தேவநாயகம். அதற்கு அப்போதைய பிரதமர் (பின்னர் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா கொடுத்த பரிசுதான் நீதி அமைச்சர் பதவி.

ஆனால் கடும் விமர்னத்துக்கு உள்ளாகி நிற்கும் இந்தக் கொடூரச் சட்டத்துக்கு இப்போது திருத்தச் சட்டமூலத்தை அமைச்சரவையில் சமர்ப்பித்தவர் இப்போதைய நீதியமைச்சரான அலி சப்றி அல்லர். சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த, முதிர்ந்த சட்டவறிஞரான அவர், இந்தக் கொடூரத்துக்குத் தான் துணைபோய், வரலாற்றுத் தவறு இழைக்க மறுத்து, அதிலிருந்து ஒதுங்கிக் கொண்டாரோ என்னவோ?

நமது சட்டப் போராசிரியர், வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்தான் அந்தச் சட்டத் திருத்தத்தை அமைச்சரவையில் சமர்ப்பித்தார்.

நீதியை நிலைநாட்டுவதற்கான சட்டத் திருத்தம் அல்ல இது, சர்வதேசத்தின் காதில் பூச்சுற்றும் ராஜபக்ஷக்களின் தந்திரம் இது என்பதால்தானோ என்னவோ, நீதித்துறை தொடர்பான சட்டமூலத்தை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அமைச்சரவையில் சமர்ப்பித்திருக்கின்றார்.

அது வரத்த்தமானியில் பிரசுரமாகி விட்டமையினால் இனிமேல் அது குறித்து சமூக ஊடகங்களில் பிய்த்து உதறுவார்கள். நீதி அமைச்சர் அலி சப்றியை விட பேராசிரியர் ஜி.எல்.பீரிஸின் பெயர்தான் அதிகம் பந்தாடப்படும் என எதிர்பார்க்கலாம்.

★ ★ ★

நாட்டின் பொருளாதார நிலைமை மிக மிக மோசம். அடுத்து வரும் வாரங்களும், மாதங்களும் உச்ச நெருக்கடியைத் தரப் போகின்றவையாக இருக்கப்போகின்றன.

விலைவாசி உயர்வு, பொருள்கள் பற்றாக்குறை, தட்டுப்பாடு என்று பூதாகரமாகும் பிரச்சினைகள் பசி – பட்டினி, சிவில் குழப்பம், மக்கள் எதிர்ப்பு என்று வேகம் எடுக்கும்.

இதை முன் கூட்டியே உணர்ந்து கொண்டோ என்னவோ, அத்தகைய நெருக்கடிகளுக்கு முகம் கொடுப்பதற்கான ஆயத்தங்களில் அரசு ஈடுபடத் தொடங்கி விட்டதாகக் கூறப்படுகின்றது.

மக்களின் எதிர்ப்பு பெரும்பாலும் தொழிற்சங்கங்கள் ஊடாகப் பீறிடும் என்பதால் தொழிற்சங்கங்களை சட்டத்தின் மூலம் முற்றாகத் தடை செய்யும் – அல்லது வேலை நிறுத்தங்களை சட்டவிரோதமாக அறிவிக்கும் – சட்ட ஏற்பாடுகளுக்குள் இறங்குவதற்கு அரசு தயாராகி வருவதாக விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரே, இத்தகைய தயார் நிலைக்கு அரசு நகர்வதாக ஒப்புக் கொண்டிருக்கின்றார்.

மக்களின் எரிச்சல், இயலாமை, நெருக்கடிகள், கஷ்டங்கள் பீறிடத் தொடங்கியதும் அடக்குமுறைகள் தன் பாட்டில் கட்டவிழும்.

பிறகென்ன? காத்திருக்கும் – பார்த்திருக்கும் – இராணுவப் பாணி நிர்வாகம் பக்' கெனப் பாயும். எல்லாம் தயாராகி வருவதாகவே தோன்றுகின்றது.

★ ★ ★

தென்னிலங்கை ஊடக நண்பர் ஒருவர் தெரிவித்த தகவல் இது.

அண்மையில் மின்சக்தி அமைச்சில் முக்கிய கூட்டம் நடந்தது. மின்சார சபை உயரதிகாரிகளும் பங்குபற்றினர். அந்தக் கூட்டத்துக்கு சம்பந்தமில்லாத ஜூனியர் ராஜபக்ஷ ஒருவர் திடீரென பிரசன்னமாகினார்.

மாற்று மின் உற்பத்தி மார்க்கமான சூரிய மின்சாரத்தை பயன்படுத்துவது குறித்து பரிசீலிக்கப்பட்டது. இது தொடர்பான திட்டத்தை இந்தியாவின் பிரபல நிறுவனமான அதானி குழுமத்துக்கு வழங்கும்படி ஜூனியர் ராஜபக்ஷ அன்புக் கட்டளை' வழங்கினார். பிற கென்ன? அதுவே தீர்மானமாயிற்று.

நானூறு மெகா வாட்ஸ் சூரிய மின் உற்பத்திக் கட்டமைப்பை வடக்கு, கிழக்கில் அதானி குழுமம் முன்னெடுக்கும் என முடிவாயிற்றாம்.

இந்திய நிறுவனத்துக்கு தெற்கில் எதிர்ப்பு இருந்தாலும், வடக்கு, கிழக்கில் இருக்காது. ஆகவே சிக்கலின்றி திட்டத்தை மேற்கொள்ளலாம் என்றும் குசுகுசுக்கப்பட்டதாம்.

அதானி குழுமத்துக்கு எண்ணூறு மெகா வாட்ஸ் உற்பத்தித் திட்டத்துக்கான வசதி இந்தியாவில் வழங்கப்படும் என முன்னர் உறுதியளிக்கப்பட்டதாம். ஆனால் மோடி அரசினால் அதில் அரைவாசிக்கான ஒழுங்குகளே செய்ய முடிந்தது. அதனால் எஞ்சிய திட்டத்துக்கு நண்பர்கள் ராஜபக்ஷ மூலம் இந்த ஒழுங்கு என்றார் அவர்.

அவரவர் காட்டில் மழை. அவ்வளவுதான். நாங்கள்தான் பொதுமக்கள். பாவம் ஏமாளிகள்...!

– மின்னல் –

---

## பழைய மண்வெட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எம்மிடம் ஒரு முனை மடிந்த மண்வெட்டி உள்ளது. புது மண்வெட்டி வருவதற்குக் காலம் எடுக்கும். இந்தநிலையில், இந்தப் பழைய மண்வெட்டியைப் பயன்படுத்தி சிறிய வேலையாவது செய்ய வேண்டும். புதிய மண்வெட்டி வரும் வரும் என்று இருப்பதில் அர்த்தம் இல்லை.

இதைப்போல்தான் அரசமைப்பின் 13ஆவது திருத்தம். தமிழ் மக்களின் பிரச்சினைகள் இதன் மூலம் தீர்க்கப் படாது. ஆனால், சிறிய சிறிய அலுவல்களைப் பார்த்துக்கொள்ள முடியும் என்றுதான் கூறுகின்றோம்.

நாம் இப்போது இருக்கும் நிலையில் இராணுவ ஆட்சி வடக்கு, கிழக்கில் அதிகரிக்கின்றது. சிங்களக் குடியேற்றம் நடைபெறுகின்றது. நாம் ஒன்றுமே செய்ய முடியாமல் நிற்கின்றோம். இதற்கு இருக்கும் சட்டம் ஒன்றை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும் – என்றார்.

## யாழ்.நகரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக் காலை கிளிநொச்சியில் இருந்து ஆரம்பமாகி யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது.

இதன்போது தமிழர்களின் அரசியல் அபிலாகைளை 13ஆவது திருத்தத்துக்குள் முடக்கம் சதி முயற்சியை முறியடிக்க அனைத்துத் தமிழ் மக்களதும் பூரணமான ஆதரவைகி கோரி துண்டுப் பிரசுரங்களும் வழங்கப்பட்டன.

வாகனப் பேரணியில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், சட்டத்தரணிகளான ந.காண்டீபன், க.சுகாஸ், உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் ஆதரவாளர்கள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பனை ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அமைச்சர் வருகை

யாழ்ப்பாணம், ஜன. 29

நீதி அமைச்சா அலி சப்ரி இன்று சனிக்கிழமை மாலை 3.15 மணியளவில் கைதடி பனை ஆராய்ச்சி விஜயம் செய்து பனம் தொழில் வல்லுநர்களைச் சந்தித்துக் கலந்துரையாட உள்ளா எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே பனை சா தொழிலில் ஈடுபட்டுள்ளவாகள் தமது பிரச்சினைகள் பற்றித் தெரிவித்து தீர்வினைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

விற்பனை

மூன்று மாதம் பாவித்த குளிர் ஊட்டி (A/C) யும், பாவித்த DVD Player மற்றும் பாவித்த மேசை, கதிரைகள் என்பன விற்பனைக்கு உள்ளது.

தொடர்பு:- 075 340 3985, 077 5900 517

இறைச்சிக் கோழி விற்பனை

புறோய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.



U.S.A பாம்

குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500



# ஜெனிவா கூட்டத் தொடரில் எம்மை பயன்படுத்த திட்டம்!

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கண்டனம்

மார்ச்மாதம்நடைபெறஉள்ளஜெனிவா கூட்டத் தொடருக்கு தங்களுடைய அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு நடமாடும் சேவைகள் மூலம் எம்மைப் பயன்படுத்தப் பார்க்கின்றனர் என முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்க தலைவி மரியசுரேஷ் ஈஸ்வரி தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் -

நீதி அமைச்சால் முல்லைத்தீவு மாவட்டத்தில் நடமாடும் சேவை நடத்தப்படுகிறது. குறிப்பாக இந்த நீதி அமைச்சால் நடத்தப்படும் நடமாடும் சேவையில் பல்வேறு திட்டங்கள் ஊடாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் ஒன்று திரட்டும் ஒரு திட்டம் இங்கே முன்னெடுக்கப்படுகின்றது.

இந்தத் திட்டத்தில் குறிப்பாக ஓர் எம்.பி. அலுவலகத்தில் பதவியில் இருந்தவர்கள் அதனூடாக செய்யமுடியாததை இங்கேவந்து இந்த காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உடைய விடயத்தை பல்வேறு வழிகளிலும் முயன்று முடியாமல் போன விடயத்தை இவ்வாறான ஒரு வகையிலே சாதிப்பதற்காக முனைகின்றனர்.

இவர்கள் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு வருகை தருகின்றனர் என அறிந்திருக்கின்றோம். இவர்களுடைய இந்த நடமாடும் சேவை மார்ச் மாதம் நடைபெற உள்ள ஜெனிவா கூட்டத் தொடருக்கு தங்களுடைய அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு நாங்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களுடன் கலந்துரையாடி உள்ளதாகவும் அவர்கள் தங்களுடைய செயற்பாடுகளுக்கு சம்மதம் தெரிவித்துள்ளனர் எனவும் தெரிவிப்பதற்காகவே இவர்கள் இவ்வாறான ஒரு செயற்பாடுகளை முன்னெடுக்கின்றனர்.

இந்த நடமாடும் சேவையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய விடயம் தொடர்பான விடயங்களை நாங்கள் வன்மையாகக் கண்டித்து இதனைப் புறக்கணித்து நிற்கின்றோம்.

அவர்கள் வேறு விடயங்கள் தொடர்பில் கதைப்பதால் எங்களுக்கு ஆட்சேபனையில்லை. ஆனால், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களினுடைய உறவினர்களுடைய விடயத்தை கையாண்டு எங்களுடைய உறவுகளை சிதைத்து சின்னாபின்னமாக்குவதற்காக செய்யப்படுகின்ற ஒரு வேலையாகவே நாங்கள் இதனைப் பார்க்கின்றோம்.

எத்தனையோ ஆணைக்குழுக்களிடம் சென்று 12 வருடமாகக் கண்ட கனவுகளும் கற்பனைகளும் ஏராளம். ஆனால் இந்த கற்பனை கனவுகள் அனைத்தையும் உடைத்து மீண்டும் ஒரு நாடகத்தை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

நமது உறவுகளுக்கு தாங்கள் நட்டஈடு வழங்குவதாகவும் இவர்களுடைய இந்தப் பிரச்சினையை மிக விரைவில் முடிவுக்கு கொண்டுவர உள்ளதாகவும் காட்ட முனைகிறார்கள்.

கடந்த 12 வருடமாக எடுக்கப்பட்ட விசாரணைகளுக்குத் தீர்வு இல்லை. இவ்வாறு பதிவுகளை மேற்கொண்டவர்களுக்கான உரிய பதில்களை வழங்குவதை விடுத்து, மீண்டும் வருகை தந்து இவ்வாறு இரகசியமான முறையிலேயே பதிவுகளை மேற்கொண்டு எங்களுடைய உறவுகளை பிரித்துக் கையாள்வதற்கு முயல்கின்றார்கள்.

ஆகவே, இந்த விடயத்தில் நாங்கள் ஒருபோதும் சம்மதிக்க மாட்டோம். இந்த அரசாங்கத்திடம் தீர்வை எதிர்பாத்து நாங்கள் இந்தப் போராட்டத்தை செய்யவில்லை. இந்த அரசாங்கத்திடம் நாங்கள் பல தடவைகள் சென்று எந்த ஒரு தீர்வும் கிடைக்காத நிலையிலேயே சர்வதேச விசாரணை கோரி நாங்கள் போராடிக் கொண்டிருக்கின்றோம்.

எங்களுடைய இந்தப் போராட்டத்தைத் தடை செய்து, இந்த உறவுகள் போராட முடியாத வகையில் அச்சுறுத்தல்களையும் விடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். நாங்கள் இந்த அரசாங்கத்திடம் எந்த ஒரு நீதியை எதிர்பார்த்து இந்தப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்க வில்லை. நாங்கள் தனித்தனியாக எங்களுடைய உறவுகளைத் தேடிக் கொண்டிருக்கின்றோம்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், குறிப்பாக வட மாகாணத்தில் வந்து எங்களுடைய தமிழ் உறவுகளைப் பயன்படுத்திக் கொண்டு ஒரு நோக்கோடு இந்த நடமாடும் சேவையை இவர்கள் செய்கின்றார்கள். இந்த அரசாங்கம் எமக்கான தீர்வை வழங்கப்போவதில்லை.

இவ்வாறான செயற்பாடுகளை நாம் புறக்கணிக்க வேண்டும் என அனைத்து உறவுகளிடமும் கேட்டுக்கொள்கின்றோம். இவ்வாறான ஏமாற்று வேலைகளுக்கு இடம் கொடுக்க வேண்டாம் என்பதைக் கேட்டுக்கொள்கின்றேன் எனவும் இதன் போது கருத்துத் தெரிவித்துள்ளார்.




## திருமலை எரிபொருள் கூட்டு நிறுவனத்துக்கு இந்திய - இலங்கை பணிப்பாளர்கள் நியமனம்!

திருகோணமலை எரிபொருள் தாங்கிகள் தொடர்பில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் உருவாக்கப்பட்டுள்ள, ட்ரின்கோ பெற்றோலியம் டேமினல் பிரைவெட் லிமிட்டெட் நிறுவனத்துக்கு பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இதன்படி 61 எரிபொருள் தாங்கிகளையும் நிர்வகிக்கும் கூட்டு நிறுவனத்துக்கு சுமித் விஜேசிங்க தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் பேராசிரியர் பிரபாத் சமரசிங்க, புஹூபதி கஹதுடுவ மற்றும் தம்மிக்க மல்லிகாராச்சி ஆகியோர் பணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்திய எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் சார்பில், மனோஜ் குப்தா, அஸீம் பார்ஹவா மற்றும் ராஜேஸ் பாகட் ஆகியோர் பணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில் குறித்த பணிப்பாளர் சபையினருடன் இலங்கையின் எரிசக்தித்துறை அமைச்சர் உதய கம்மன்பில கலந்துரையாடல்களை நடத்தியுள்ளார்.

## மாங்குளத்தில் நீதிமன்றத்தை திறந்துவைத்த நீதி அமைச்சர்





முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த நீதிமன்றக் கட்டடத் தொகுதியை நீதி அமைச்சர் அலி சப்ரி திறந்து வைத்தார்.

முல்லைத்தீவு மாவட்டம் நிலபரப்பில் அதிகளவான நிலப்பரப்பாகக் காணப்படுகின்ற நிலையில் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்துக்கு மக்கள் மிகுந்த தூரங்களில் இருந்து வருகை தரும் போது அவர்களுடைய வழக்குகள் கூப்பிடப்பட்டு அவர்களுக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்ட சம்பவங்கள் போன்ற பல்வேறு பாதிப்புகளைக் கருத்திற்கொண்டு முல்லைத்தீவு மாவட்டத்தின் நீதிமன்றத்தில் கடமையாற்றிய அதிகாரிகளின் அயராத முயற்சியின் பயனாக முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பகுதியில் சுற்றுலா நீதிமன்றம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

ஆரம்பகாலத்தில் துணுக்காய் பகுதியில் இடம்பெற்ற இந்த நீதிமன்றத்தின் செயற்பாடுகள் காலப்போக்கில் மாங்குளத்தில் நிரந்தரக் கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு வழிவகுத்தது. அந்த வகையிலே மாங்குளத்தில் நீதிமன்றக் கட்டடத் தொகுதி ஒன்று அமைக்கப்பட்டு தற்போது வாரத்தின் ஒவ்வொரு புதன் கிழமையும் அங்கு வழக்கு விசாரணைகள் இடம் பெறுகின்றன.

குறிப்பாக மாங்குளம், மல்லாவி, ஐயன்கன்குளம், நட்டாங்கண்டல் உள்ளிட்ட பொலிஸ் பிரிவுகளை உள்ளடக்கிய பகுதிகளில் வருகின்ற வழக்குகள் ஒவ்வொரு புதன் கிழமைகளில் இங்கே விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

இவ்வாறு முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான் பகுதியைச் சேர்ந்த மக்களின் நலன் கருதி மாங்குளம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நீதிமன்ற கட்டடத் தொகுதியை வைபவரீதியாக நாட்டினுடைய நீதி அமைச்சர் அலி சப்ரி திறந்து வைத்தார்.

வியாழன் மாலை 3 மணி அளவில் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி ரி. சரவணராஜா தலைமையில் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் நீதி அமைச்சர் அலி சப்ரி, நீதி அமைச்சின் செயலாளர், கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, முல்லைத்தீவு மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய காதர் மஸ்தான், வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன், சட்டத்தரணிகள், ஊழியர்கள் உள்ளிட்ட பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

காலப்போக்கில் குறித்த நீதிமன்றத்தின் செயற்பாடுகள் வாரத்தின் 5 நாள்களும் இடம் பெறக்கூடிய வகையில் தனியாக நீதிபதி ஒருவர் நியமிக்கப்பட்டு நீதிமன்றம் இயங்க உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது.

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# புதிய மொந்தையில் பழைய கள்!

மனித உரிமைகளைப் பேணும் விடயத்தில் மிக மோசமான விமர்சனங்களுக்கு உள்ளாகியிருக்கும் இலங்கை அரசு – ராஜபக்ஷ நிர்வாகம் – அது தொடர்பில் தன்னை நியாயப்படுத்துவதற்கு பல நடிப்புக்களைக் காட்டும். அறிக்கைகள், அறிவிப்புகங்களைசர்வதேசத்துக்குமுன்வைக்கும். ஆனால் அவற்றில் எவையும் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. இதுதான் ராஜபக்ஷ அரசின் தந்திரம்.

அத்தகைய தந்திரம் ஒன்று உடனடியாகக் கையும் மெய்யுமாக அம்பலமாகியிருப்பது நேற்று நடந்தேறியுள்ளது.

'தற்காலிக ஏற்பாடுகள்' என்ற பெயரோடு 1979இல் கொண்டு வரப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டம், கடந்த 43 வருடங்களாக நடைமுறையில் உள்ளது. மனித நாகரிகத்துக்கே ஒவ்வாத – மிருகத்தனமாக – மிக மோசமான – மனித மாண்புகளுக்கே முரணான – மிகக் கேவலமான – ஒரு சட்டம் எனறு நேரடியாக விமர்சிக்கப்படும் இந்தச் சட்டத்தின் விதிமுறைகளை வைத்துக் கொண்டுதான் – சட்டத்தின் பெயரால் – மிகக் கொடூரமான இனவெறி ஆட்சியைத் தொடருகின்றது கொழும்பின் பேரினவாத அரசு.

சர்வதேச மட்டத்தில் இதற்கு எதிராக எழுந்த ஒன்றுபட்ட அழுத்தம் காரணமாக இந்தக் கேவலமான சட்டத்தை மாற்றியமைப்பதாக சர்வதேசத்துக்கு கொழும்பு ஆட்சிப் பீடம் வாக்குறுதி தந்து ஆண்டுகள் பல கடந்து விட்டன.

சட்டத்தின் பெயரால் மனித நாகரிகத்துக்கே ஒவ்வாத கொடூரத்தைப் புரிந்து வரும் கொழும்பு அரசின் இந்தக் குரூரப் போக்கு, சர்வதேச ரீதியில் கடுமையான கண்டனங்களுக்கும் விமர்சனங்களுக்கும் உள்ளாகியிருக்கின்றது. அடுத்த மாதம் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இந்தச் சட்டம் பலத்த எதிர்ப்பை கொழும்புக்கு வாங்கித் தரும் என்பதை உணர்ந்த ராஜபக்ஷ ஆட்சியாளர்கள், அந்தச் சட்டத்தை மறுசீரமைக்கின்றோம் என்ற பெயரில் ஒரு சட்டத்திருத்தத்தை கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பித்து, இப்போது அது வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

அதில் எந்தப் பெரிய மாற்றமும் இல்லை, பழைய சட்டத்தின் கேடுகெட்ட ஏற்பாடுகள் எல்லாம் திருத்தப்பட்ட சட்டத்தில் அப்படியே இருக்கின்றன என்பதை விலாவாரியாக அம்பலப்படுத்தியிருக்கின்றார் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன்.

ஆக, புதிய மொந்தையில் பழைய கள். அவ்வளவுதான். இதுவரை மோதகமாக வந்த விவகாரம் இனி கொழுக்கட்டையாக வரப்போகின்றது. வடிவமும் பெயரும்தான் வேறு. உள்ளீடு ஒன்றுதான்.

இந்தச் சட்டத்தை மறுசீரமைக்கிறோம் என்ற நாடகத்தை கொழும்பு அரங்கேற்றும் இச்சமயத்தில் அதன் உண்மை முகத்தை அம்பலப்படுத்தும் ஒரு விடயமும் அரங்கேறியிருக்கின்றது.

ஈஸ்டர் தாக்குதலை ஒட்டி இந்தச் சட்டத்தின் கீழ் சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா கைது செய்யப்பட்டு நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றமை அரசுக்கு எதிராகப் பெரும் அழுத்தத்தை சர்வதேச மட்டத்தில் உருவாக்கியிருக்கின்றது.

அவருக்கு பிணை வழங்கப்படும் என்று அரசுத் தரப்பு உறுதியளித்தது. அவரது பிணை மனு புத்தளம் மேல் நீதிமன்றத்தில் எடுக்கப்படும் போது அதனை அரசுத் தரப்பு ஆட்சேபிக்காது என்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சட்டா அதிபர் தரப்பால் உறுதி கூறப்பட்டது. ஆனால் நேற்று புத்தளம் மேல் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது இந்தச் சட்டத்தின் உண்மை முகத்தை அம்பலப்படுத்தினார் நீதிபதி.

அரசுத் தரப்பு பிணை வழங்குவதை ஆட்சேபிக்கவில்லை தான். ஆனால் பயங்கவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பிணை வழங்குவதற்கு எங்கே இடமிருக்கினறுது என்று கேட்டார் நீதிபதி. அதனால் பிணை வழங்க முடியாது என்ற உத்தரவையும் அவர் வழங்கினார்.

அப்படி பிணை வழங்கும் திருத்தம் கூட இப்போது வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ள சட்ட திருத்தத்தில் இல்லை.

ஆக, இப்போது வந்திருக்கும் சட்டத் திருத்தமும் பௌத்த – சிங்களப் பேரினவாத அரசின் இனவெறிப் போக்கின் கொடூரக் கருவியாகவே தொடரும் ஓர் ஏற்பாடுதான். இதை சர்வதேசம் புரிந்து கொண்டால் சரி.

# இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை கண்டித்து யாழ்ப்பாணத்தில் போராட்டம்



யாழ்ப்பாணம் -ஊர்காவற்துறை பிரதேச செயலகம் முன்பாக நேற்று (வெள்ளிக் கிழமை) காலை ஊர்காவற்துறை பிரதேச கடற்தொழிலாளர்கள் கூட்டுறவு சங்கம் மற்றும் யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர்கள் கூட்டுறவுசங்கங்களின்சம்மேளனமும்இணைந்து இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைக் கண்டித்து கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

ஊர்காவற்துறை கடற்தொழிலாளர் சமாசம் முன்பாக போராட்டத்தை ஆரம்பித்த மீனவர்கள் அங்கிருந்து ஊர்காவற்துறை பிரதேச செயலகம் வரையில் பேரணியாக சென்றனர்.

பிரதேச செயலகத்துக்குப் பேரணியாகச் சென்ற மீனவர்கள் பிரதேச செயலகம் ஊடாக ஜனாதிபதி மற்றும் கடற்தொழில் அமைச்சர் ஆகியோருக்கு மகஜரும் கையளித்திருந்தனர்.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் கட்டுக்கடங்காமல் செல்வதால், எமது கடல் வளங்களும், கடல்சூழலும், எமது உபகரணங்கள், வாழ்வாதாரங்கள் என்பன அழிக்கப்படுகிறது.

அதனால் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக சொல்லான துன்பங்களை அனுபவித்து வருகின்றோம். பல போராட்டங்களை முன்னெடுத்து இருக்கின்றோம். பல தரப்புக்களிடமும் மகஜர்களைக் கையளித்துள்ளோம். இருந்தும் இன்று வரை எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை.

வெளிநாட்டு மீனவர்கள் ஒழுங்கப்படுத்தல் தடைச்சட்டத்தைக் கடுமையாக அமுல்படுத்த வேண்டும், உள்ளூர் இழுவைமடி தொழில் சட்டத்தை நடைமுறைப்படுத்தல் வேண்டும், கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் அழிக்கப்பட்ட எமது தொழில் உபகரணங்களின் மதிப்புகள் பல கோடி ரூபா. அதற்கான நஷ்டஈடுகளை பெற்றுத்தர ஆவன செய்ய வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன் வைத்தே போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அதேவேளை, மலர்ந்துள்ள இந்த வருடத்துக்குள் எமக்குத் தீர்வைப் பெற்றுத்தர சகல தரப்பினர்களும் முயற்சிகளை முன்னெடுத்து மீனவர்களின் வாழ்வாதாரத்தையும், கடல் வளத்தையும் காத்து எதிர்கால சந்ததியினரின் கைகளில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரியுள்ளனர்.

# மஹிந்த ராஜபக்ஷவிற்கு சத்திர சிகிச்சை நடந்தமையை உறுதிப்படுத்தினார் சமல்!



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரரும், அமைச்சருமான சமல் ராஜபக்ஷ, பிரதமர் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டதன் காரணமாகவே கம்பளையில் நடைபெற்ற பொது நிகழ்வொன்றில் கலந்து கொள்ள முடியாமல் போனதாக ஒப்புக்கொண்டார் என ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்த வாரத் தொடக்கத்தில் தனியார் வைத்தியசாலை ஒன்றில் முள்ளந்தண்டு அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார் எனவும், ஓய்வில் இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

எனினும் இதனை நிராகரித்த விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, தனது தந்தைக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதாக ஊடகங்களில் வெளியான செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை எனக் குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன், தான் தனது தந்தையை பார்க்கச் செல்லவில்லை எனவும், வேறு நோயாளியை பார்க்கவே வைத்தியசாலைக்கு சென்றார் எனவும் தெரிவித்திருந்தார்.

எவ்வாறாயினும், கம்பளையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் சமல் ராஜபக்ஷ, சத்திரசிகிச்சைக்கு பின்னர் ஓய்வில் இருந்தமையால், பிரதமர் குறிப்பிட்ட நிகழ்வில் கலந்துகொள்ள முடியாமல் போனதாகத் தெரிவித்துள்ளார்.

# தபால் நடவடிக்கைகளை விரிவுபடுத்தி டிஜிற்றல் மயப்படுத்துவதற்குத் திட்டம்

21ஆம் நூற்றாண்டில் செயல் திறன் மிக்க தபால் சேவையை நடைமுறைப்படுத்தும் நோக்கில், தபால் நடவடிக்கைகளை விரிவுபடுத்தி அதன் செயற்பாடுகளை டிஜிற்றல் மயமாக்க எதிர்வரும் சில மாதங்களுக்குள் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற தபால் திணைக்களத்தால் அஞ்சல் குறியீட்டு விவரக்கொத்து வெளியீட்டு நிகழ்வில் தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த விவரக்கொத்தில் ஒவ்வொரு அஞ்சல் அலுவலகத்திற்கும், உப அஞ்சல் அலுவலகத்துக்கும், ஒரு குறியீட்டு எண் குறிக்கப்பட்டுள்ளன. இதனூடாக கடிதங்கள் மற்றும் பொருள்களை விநியோகிப்பதில் ஏற்படும் சிரமங்களைத் தவிர்க்க முடியும் என்றும் அவர் கூறினார்.

இலங்கையில், நாடளாவிய ரீதியில் 654 அஞ்சல் அலுவலங்களும், 3 ஆயிரத்து 410 உப அஞ்சல் அலுவலகங்களும் காணப்படுகின்றன. இந்த அனைத்து அஞ்சல் அலுவலகங்களிலும் கடித பரிமாற்றம் மேற்கொள்ளப்படுவதில்லை . சில அஞ்சல் அலுவலகங்கள் பொருள்களை மாத்திரமே பரிமாற்றம் செய்கின்றன. மேலும் இந்த அஞ்சல் குறியீட்டு விவரக்கொத்து மூலம் முகவரிகளைக் கண்டுபிடிப்பதில் உள்ள சிரமங்களும் தவிர்க்கப்படும் என்றும் தபால் மா அதிபர் தெரிவித்தார்.



இந்த விவரக்கொத்தின் முதல் பதிப்பு 1996 ஆம் ஆண்டு முதலாவதாக வெளியிடப்பட்டது. இதன் இரண்டாம் பதிப்பு இந்த வருடம் அச்சிடப்பட்டு, அதன் முதல் பிரதி வெகுஜன ஊடகத்துறை அமைச்சின் செயலாளரிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# 50 கோடி அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு இந்தியா இணக்கம்

## எரிபொருள் பிரச்சினைக்கு தீர்வு என்கிறார் கம்மன்பில

இலங்கைக்கு 50 கோடி அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கான பிரேரணைக்கு இந்திய அரசாங்கம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடியைத் தீர்க்க இந்தக் கடன் உதவியாக இருக்கும் என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அந்த பணத்தின் மூலம் மார்ச் மாதத்துக்குள் நாட்டுக்கு எரிபொருளை இறக்குமதி செய்ய முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் எதிர்காலத்தில் இந்தியாவில் இருந்து நேரடியாக மின்சாரத்தைப் பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன என அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



# திங்கள் வரை மின் துண்டிப்பு இல்லை!

ஜனவரி 31 ஆம் திகதி திங்கட்கிழமை வரையில் மின் துண்டிப்பு இல்லை என இலங்கை மின்சார சபை பொதுமுகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், அதன் பின்னர் மின்வெட்டை அமுல்படுத்துவதா இல்லையா என்பது தொடர்பில் எதிர்வரும் 31 ஆம் திகதி தீர்மானிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு புதிய சுகாதார வழிகாட்டல் வெளியீடு

இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கான புதுப்பிக்கப்பட்ட சுகாதார வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அதற்கமைய, புதிய வழிகாட்டுதல்களின்படி, கொரோனா நோய்க்கு எதிரான ஒரு தடுப்பூசியைப் பெற்ற கடந்த ஆறு மாதங்களில் கொரோனா நோயால் பாதிக்கப்பட்ட சுற்றுலாப் பயணிகள் அல்லது இரட்டைக் குடியுரிமை உள்ளவர்கள் முழுமையாகத் தடுப்பூசி செலுத்தப்பட்டவர்களாகக் கருதப்படுகிறார்கள்.

மேலும், நாட்டுக்கு வந்தவுடன் விமான நிலையத்தில் நடத்தப்படும் பி.சி.ஆர். பரிசோதனையின்போது 30 இற்கும் குறைவான சி.ரி. பரிசோதனை முடிவுகளைக் கொண்ட சுற்றுலாப் பயணிகள் மற்றும் இலங்கையர்கள் 7 நாளகள் சுய தனிமைப்படுத்தப்பட்ட காலத்துக்கு இணங்கி விமான நிலையத்தை விட்டு வெளியேற முடியும்.

மேற்படி பெறுபேறுகளைக் கொண்டவர்களின் வீட்டில் தனிமைப்படுத்தத் தேவையான அனைத்து வசதிகளும் இருந்தால் மட்டுமே அவர்கள் விமான நிலையத்திலிருந்து விடுவிக்கப்படுவார்கள்.

மேலும், முழுமையாகத் தடுப்பூசி போடப்பட்ட பெற்றோருடன் வரும் 12 வயதுக்குட்பட்ட குழந்தைகள் கொரோனாப் பரிசோதனையில் இருந்து முற்றிலும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் 12 முதல் 18 வயதுக்குட்பட்ட ஒரே ஒரு தடுப்பூசி போட்ட குழந்தைகளுக்கும் தங்கள் பெற்றோருடன் நாட்டுக்குள் பிரவேசிக்க வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அதிக ஆபத்துள்ள நாடுகளில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளுக்கான தனிமைப்படுத்தல் காலம் 7 முதல் 14 நாள்கள் வரை மாறுபடும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# உயர்தரக் கல்வியை ஊக்குவிப்பதற்கு யாழ்.மத்திய கல்லூரியில் புலமைப்பரிசில்!

## 1987 ஆம் ஆண்டு உயர்தர மாணவர் நிதியுதவி



கலையமுதன்
யாழ்ப்பாணம்,ஜன.28

யாழ் மத்திய கல்லூரியில் கல்விப் பொது தராதர சாதாரண தரத்தில் கல்வி கற்று இறுதியாக நடைபெற்ற பரீட்சையில் அதிதிறமைச் சித்திகளை பெற்ற மாணவர்களின் உயர்தர கல்வியை ஊக்குவிக்கும் வகையில் கல்லூரியின் 1987 ஆம் ஆண்டு உயர்தர மாணவர்களது நிதிப்பங்களிப்புடன் புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

பாடசாலையின் முதல்வர் எழில்வேந்தன் தலைமையில் வவுனியா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மங்களேஸ்வரன் பிரதம அதிதியாக கலந்துகொண்ட குறித்த நிகழ்வு சம்பிரதாய நிகழ்வுகளுடன் ஆரம்பமானது.


மேற்படி நிகழ்வில் மத்திய கல்லூரியில் உயர்தரக் கல்வியைத் தொடரவுள்ள மாணவர்களுக்காக தலா ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபா புலமைப் பரிசில் 12 மணவர்களுக்கு வழங்கப்பட்டது.

இதற்காக சுமார் 1.68 மில்லியன் நிதி குறித்த 1987 ஆம் ஆண்டின் உயர்தரப் பிரிவு மாணவர்களால் பொன். விபுலானந்தன் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டதாக இந்த புலமைப்பரிசில் திட்டத்துக்குரிய இணைப்பாளரும் கிளிநொச்சி மாவட்ட புள்ளிவிவரவியலாளருமான வித்தியானந்தநேசன் தெரிவித்தார்.

இந்நிலையில் மேற்படி மாணவர்களின் எதிர்காலம் சிறப்பாக அமையப்பெற வேண்டும் என்ற எண்ணத்துடன் மத்திய கல்லூரியின் 1987 ஆம் ஆண்டு உயர்தர பிரிவில் கல்விகற்ற மாணவர்கள் நிதி ஏற்பாடு செய்திருந்தமைக்கு அமைய இந்த புலமைப்பரிச்ல் திட்டம் வழங்கிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வவுனியா பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ர விரிவுரையாளர் விஜயமோகன் மற்றும் யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்க தலைவர் சொலமன் ஆகியோர் கலந்து சிறப்பித்து உரையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# துறைமுக நகரத்துக்கு நிகரான சுற்றுலாமையம் காலியில் அமைப்பு



காலி துறைமுகத்தை அண்மித்த பகுதியில் கொழும்பு துறைமுக நகருக்கு நிகரான சுற்றுலா வலயமொன்றை அமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக துறைமுக அமைச்சர் ரோஹித அபே குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்ச்சியின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

காலி துறைமுகத்தின் அபிவிருத்தியுடன், பயணிகள் கப்பல்களுக்கான புதிய பயணிகள் முனையம் மற்றும் 40 ஹெக்டேயர் நிலப்பரப்பு கடல் நீரால் நிரப்பப்பட்டு புதிய நில சுற்றுலா வலயத்தை உருவாக்க எதிர்பார்க்கப்படுவதாக அவர் இதன்போது தெரிவித்துள்ளார்.

இதன்மூலம், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு நீருக்கடியில் ஓய்வு விடுதிகள், நீர் விளையாட்டு பகுதிகள் மற்றும் ஹோட்டல்களைக் கட்டுவதற்கான வாய்ப்புகளை உருவாக்க முடியும் என்றும் அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டார்.

# அகில எல்லாவல எம்.பிக்கும் கொவிட்!

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அகில எல்லாவலவுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களாக 40 இற்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஹற்றனில் கோர விபத்து; ஒருவர் சாவு; 16 பேர் காயம்!

ஹற்றன் – டிக்கோயா தரவளை பகுதியில் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், 16 பேர் காயமடைந்துள்ளனர்.

ஆடைத் தொழிற்சாலைக்கு பணியாளர்களை ஏற்றிச் சென்ற பஸ்ஸே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதன்போது காயமடைந்தவர்கள் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப் படுகின்றது. விபத்து தொடர்பாக வழக்கு பதிவு செய்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# தனிமைப்படுத்தல் தொடர்பான புதிய வழிகாட்டுதல்கள் வெளியீடு

கொரோனாத் தடுப்பு தொடர்பான புதிய சுகாதார வழிகாட்டுதல்கள் வெளியாகியுள்ளன.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் ஒப்பத்துடன், புதிய சுகாதார வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இதற்கமைய முழுமையாகத் தடுப்பூசி போடப்பட்ட ஒருவர், கொரோனாத் தொற்றுடன் தொடர்புடையவராக இருந்தாலும், எந்த அறிகுறிகளையும் காட்டாத பட்சத்தில், அவர் தனிமைப்படுத்தலின்றி தங்கள் கடமைகளைச் செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்படு கின்றது.

இருப்பினும், கொரோனா தொற்றுடன் தொடர்புடைய நபருக்கு அறிகுறிகள் தென்பட்டால், அவர் உடனடியாக அன்டிஜென் அல்லது பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்குவரும் நபர்களுக்காக நடைமுறைப்படுத்தப்படும் தனிமைப்படுத்தல் முறையிலும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் பல திருத்தங்களை வெளியிட்டுள்ளார்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 266**

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**677.இந்திய குடியரசு தினத்திற்கு மாகாண ஆளுநர் இருக்க, அவைத் தலைவர் சிவஞானம் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டமையையும், அவர் ஒப்பந்த காலங்கள் பற்றிப் பேசியவையும் சேர்த்து ஊடகவியலாளர்களால் பாரிய வியூகம் ஒன்று இந்தியாவால் வகுக்கப்படுவதாகக் கருதப்படுகின்றதே?**

தற்சமயம் மோடியின் அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருக்கும் ஜெய்சங்கரும் ஹர்தீப் சிங் பூரியும் ஒப்பந்த காலத்தில் ஸ்ரீலங்காவில் பணி புரிந்தவர்கள். தமிழர்கள் பிரச்சினைகளை நன்கு அறிந்தவர்கள் என்பதால் வருகின்ற செய்திகளில் விடயங்களை கையாள மோடியின் விசேட தூதுவராக பூரி நியமிக்கப்படலாம் என சில ஆய்வாளர்கள், ஊடகவியலாளர்கள் அனுமானங்கள் செய்கிறார்கள். பாரிய நடவடிக்கைக்கான வெள்ளோட்டங்களாக இவை பார்க்கப்படுகின்றன. கமலா ஹரிஸ் அமெரிக்க உப ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டபோது கூட ஹரிஸுக்கான தமிழர்கள் (Tamils for Harris), பைடனுக்கான தமிழர்கள் (Tamils for Biden)என்ற பரப்புக்கள் உடனடி நடவடிக்கைகள் நடக்கும் என்று செய்திகள் பரப்பினார்கள். இராஜதந்திரங்களுக்காக - அழுத்தங்களுக்காக - ஒரு செய்தியை சூசுகமாகத் தெரிவிக்க இப்படியான சின்ன நகர்வுகள் மேற்கொள்ளப்படுவது உண்டு.

1984 ஆம் ஆண்டு புதுடில்லியில் குடியரசு தினத்தில் சர்வதேச பிரதிநிதிகளின் முன்னே இந்திராகாந்தி அம்மையாரே அமிர்தலிங்கத்தை கைலாகு கொடுத்து அழைத்துச் சென்று, தனக்குப் பக்கத்தில் இருத்தி, ஸ்ரீலங்கா தூதுவருக்கு செய்தி சொன்ன நகர்வுகள் உண்டு. நான் கூறியதும் கூட நடப்புக்களிலிருந்து பெறப்படும் அனுமானமே ஒழிய இந்தியாவின் கொள்கை வகுப்பாளர்களுடனான உறவின் பெயரால் அறியப்பட்டதல்ல.

இந்தியாவினதோ அமெரிக்காவினதோ அணுகுமுறைகள் அவற்றின் பல கட்டமைப்புக்களை உள்ளடக்கி அவை எடுக்கும் தீர்மானத்தில் உள்ளது. ஆயின் அவையெல்லாம் இப்படியான இடைக்கால முனைப்பில் கவனமாக இருப்பார்கள்.

1987 இல் ஜே.ஆர் தான் நியாயமாக இருக்க விரும்பும் ஒரு தலைவர், ஆயினும், இரண்டு பகுதிகளிலும் இனவாதிகள்தான் ஒரு தீர்வைத் தரவிரும்புகிறார்கள் இல்லை என இந்திராகாந்தியின் விசேட தூதுவர் பார்த்தசாரதி காலத்திலிருந்தே கூறிவந்தார். அதனால் இந்த இனவாதிகளை இரண்டு பக்கங்களிலும் கட்டுப்படுத்த இந்திய இராணுவத்தை அழைத்ததாகக் கூறி தனது தந்திரங்களால், தன்னிலிருந்த பேரினவாதிகளைப் பிரித்துக் காட்டி நாடகமாடினார்.

இப்பொழுது பேரினவாதிகளின் பிரதிநிதியாகவே தன்னைக் காட்டிக் கொள்ளும் ஜனாதிபதி கோட்டாபய இந்திய இராணுவத்தை அழைக்கப் போவதில்லை. அப்படியான ஒன்று ஸ்ரீலங்காவின் அனுமதியில்லாத தலையீடாகத்தான் நடக்க முடியும். ஒன்றில் இன்னுமொரு கலவரத்தை தமிழருக்கு எதிராகத் தூண்டி இனவாதிகள் அதனை நடத்த வேண்டும் அல்லது ஒப்பந்தத்தையே தூக்கிக் கடாசி வீசி 13ஆம் திருத்தத்தையும் இல்லாதொழிக்கும் நிலைக்கு ஸ்ரீலங்காவின் பேரினவாதம் துணிய வேண்டும். அப்படித் துணியும் பட்சத்தில் இந்தியா தன்மானம் காக்க - அதிகாரத்தை நிலைநாட்ட - யுத்த காண்டத்தை அணுகலாம். இவற்றிற்கு தமிழ் மக்களின் ஒற்றுமையும் ஆதரவும் அவசியம். சர்வதேசத்தின் அனுசரணையும் முக்கியம். அவற்றிற்கான பாதைகளை தமிழ் மக்கள் செப்பனிட வேண்டுமேயொழிய, அவற்றுக்கெதிரான கைங்கரியங்களில் ஈடுபட்டு எதிரிகளின் வியூகங்களிலே விழுதல் புத்திசாலித்தனமானதல்ல.



பிரபாவை சுதுமலையிலிருந்து ஹெலியில் ஏற்றிச் செல்ல முன்னர் அவருடன் ஹர்தீப் சிங் பூரி.

**678.கோட்டாபய கேட்கும் பேச்சுவார்த்தைகளில் புலம்பெயர் அமைப்புக்கள் விழிப்பாகவும் உாராகவும் இயங்க வேண்டும் என்கிறீர்களே ஏன்?**

சிங்கள பேரினவாதத்தின் அரசுகள் பேரினவாதத்தின் முகவர்களாக, எப்பொழுதும் தமிழ் மக்களை எதிரிகளாகக் கணித்து, அவர்களை ஓரம்கட்டி, ஒதுக்கிவிடவோ வியூகங்கள் வகுத்தார்கள். தமிழ் மக்களிடையே ஊறியிருக்கும் பல பிரிவினை வாதங்களையும் ஒற்றுமையின்மை மற்றும் தன்னலப் போக்கு என்பவற்றையும் முறையாகப் பாவித்தே பல வியூகங்களில் தமிழ் மக்கள் பலவீனப்படுத்தப்பட்டு வீழ்த்தப்பட்டார்கள். பிரதான சிங்கள அரசியல் கட்சிகள் தங்களது வாக்கு வங்கிக்காக ஒரு பொதுவான ஒற்றுமைக்கு வந்து தமிழர்களது பிரச்சினைக்குத் தீர்வு காண முடிாயதிருக்கிறார்கள். பேரினவாதத்தை மீறிச் செயற்பட முடியாதவர்களாக அவர்கள் ஒற்றுமைப்பட்டிருப்பதெல்லாம் தமிழ் மக்களின் அபிலாசைகள் எவையானாலும் அவற்றை வெட்டி வீழ்த்த வழிகள் பார்ப்பதற்கே.

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு தேடுவது என்பது பல சகாப்தங்களாக நீண்ட ஏமாற்று நாடகமாக நடந்து வருகிறது. நடிகர்கள் இரு பக்கத்திலும் மாற,பேரினவாதம் தங்களுக்கு தகுந்த நடிகர்களை வைத்து தமிழ் தலைவர்களை ஏதோ பேச்சென்று அழைத்துச் சென்று மூடைகட்டி அனுப்பிவிட்டு எந்தத் தீர்வையோ அடுத்த சந்திப்பையோ பற்றிப் பேசாமல் ஒதுங்கி நிற்கும். வெளிநாடுகள் அரசியல் தீர்வுக்காக அழுத்தம் கொடுக்கும் போதோ,விசாரிக்கும் போதோ தாம் தமிழ்ப் பரப்புக்களுடன் பேசிக் கொண்டிருக்கிறோம்என்று ஏமாற்றுவித்தைகளை நடத்திக் கொண்டிருப்பர். இதற்கு நாட்டில் சில தரப்புக்களையும் புலம்பெயரில் சில அமைப்புக்களையும் துணைக்குச் சேர்த்துக் கொள்கிறார்கள். ஆகவே இப்பொழுது ஜனாதிபதி கோட்டாபய கேட்கும் பேச்சுவார்த்தைகளின் வியூகம் புரிந்து கொள்ள முடியாததல்ல.

ஸ்ரீலங்காவின் வெளிநாட்டமைச்சின் காரியதரிசி கொலம்பகே நாட்டில் விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டு விட்டாலும், அவர்கள் புலம்பெயரில் பலமாக இயங்குகிறார்கள் என்று அறிவிப்பதில் என்ன விடயம் புதைந்து கிடக்கிறது? தமிழ் மக்களை புலம்பெயரில் அவர்களது பிரிவினைகளையும் தனிமனித சுயலாபங்களையும் பாவித்துப் பலவீனப்படுத்துவதே அதில் புதைந்துள்ள நோக்கம்.

புலம்பெயரில் - முக்கியமாக பிரித்தானியாவில் - பல புலம் பெயர்குழுக்கள் பலகாலமாக இயங்குகின்றன. அவற்றில் சில, மாற்று அரசியலுக்காக அரசுடன் பேசி, இணைந்து, அவர்கள் தர விரும்பும் அதிகாரங்களைப் பாவித்து முன்னேற விரும்புபவை. வேறு சில பேச்சுவார்த்தைகளை அடியோடு மறுப்பவை. இன்னும் சில நிபந்தனைகளுடன் இணங்குபவை. இவர்கள் எல்லோரையும் விட, வேறு சிலர் என்னதான் என்று பேசித்தான் பார்ப்போமே என்று நினைப்பவர்கள்.

ஆனால் அரசின் முயற்சியோ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக இயங்கும் குழுக்களை விலத்தி, தேசிய போக்கை வெளிப்படுத்தும் கடுமையான போக்காளரையும் தவிர்த்து, சிலருடன் பேச்சுக்களை நடத்தி, அவர்களைப் பிரபலப்படுத்தி, அவர்கள் மூலமாக மற்றவர்களை ஓரம்கட்டுவதுதான்.

அதற்காக ஒவ்வொரு அரசுக்கும் ஏதோ ஓர் அமைப்பு சாதகமாக இயங்கியது. அது அவர்கள் நடைமுறைப்படுத்திய திட்டமாகவும் இருந்து வந்திருக்கின்றது.

தமிழர் தகவல் நடுவத்தின் வரதகுமார் தந்த தகவலின்படி பிரித்தனியாவில் தமிழர் தரப்புக்களைச் சந்திக்க கோரும் அணுகுமுறைகளோ அவர்கள் பற்றிய விவரங்களையோ நடுவத்திடம் கேட்பது வழமை.தமிழர் தரப்பின் விவரங்கள் பற்றி தகவல்கள் தருவதும், நோக்கங்கள் பற்றி அவர்கள் அந்தத் தரப்புக்களுடன் ஈடாடுவதும் நடுவத்தின் வழமை.

இதே பாணியில்தான் மங்கள சமரவீரா வெளியுறவு அமைச்சராக இருந்த போது நல்லாட்சிக் காலத்தில் இருந்த நல்லெண்ணங்களோடு புலம்பெயர் அமைப்புக்களுடன் பேச முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மங்கள சமரவீர வரதகுமாருடன் பேசியபோது பிரித்தானியாவில் இயங்கும் அமைப்புக்களின் விவரங்கள் பொதுவாகப் பரிமாறப்பட்டன. வரதகுமாரின் தகவல்களின்படி இவைகள் மங்களாவினால் வெளியுறவுக்கும் பாதுகாப்புப் பகுதிகளுக்கும் தரப்பட்டு அவற்றிலிருந்த புலன் விசாரணை கட்டமைப்புக்கள் பின் 2010 இல் தோன்றியிருந்த உலகத்தமிழர் பேரவையை (Global Tamil Forum) தேர்ந்தெடுத்து அவர்களுக்குப் பிரபல்யம் அளித்து, தங்களது ஊடகங்களைத் திறந்துவிட்டு, வெளிநாட்டு ஊடகக் கருத்தாக்கங்களையும் ஏற்படுத்தி, பேரவையை தமிழ் மக்களின் மிக செல்வாக்கு மிக்க புலம்பெயரமைப்பாக ஊதிப் பெருப்பித்துக் காட்டினர். இவை பற்றிய ஆதங்கங்களை வரதகுமார், நான், வேறு சிலர் வணபிதா விற்குத் தெரிவித்தோம். இதனால் ஆண்டாண்டுகாலம் தமிழ்தேசியத்துக்கு அந்த நாட்டு அரசாங்கங்களோடு தொடர்பிலிருந்தவை யாவும் ஓரம் கட்டப்பட்டன.

பின்னர் நல்லாட்சி நலிவுற, வண.பிதா இம்மானுவேலும் விலகி, பேரவையும் ஊசலாடி, தற்பொழுது சுரேன் சுரேந்திரன் அதை வைத்து சுமந்திரனோடு அமெரிக்க இராஜாங்க திணைக்களத்துக்குச் சென்று உறவாடினார். பிரித்தானியாவில் தொழிற்கட்சிக்கான தமிழர், தாராளவாத கட்சிக்கான தமிழர் (Tamils for Liberals ) என்று பிரித்தானியா அரசுக்கு அழுத்தம் கொடுப்பவையும் அவர்களின் சொந்த வளர்ச்சிக்கான, அங்கத்துவச் சிறப்புக்களுக்கான போட்டிகளெல்லாம் பாதிக்கப்பட்டு புலம்பெயர் பலவீனப்படுத்தப்படும்.

ஆகவே, பிரித்தானிய அரசு ஊக்கம் தரும் எந்த பேச்சுவார்த்தையும் சப்பைக்கட்டுக்களுடனானவையாக ஆகாமல் கரும்பு கட்டுக்களாக வேண்டும். தேசியத்தைப் பிரதிபலித்தல் வேண்டும்.

(வளரும்)



மோடி அமைச்சரவையில் மத்திய அமைச்சராகப் பதவியேற்கும் ஹர்தீப் சிங் பூரி. ஜே.ஆர்.

‘கம்பவாரிதி’ இலங்கை ஜெயராஜ் தமது ‘உகரம்’ இணையத்தளத்தில் ‘பாட்டும் நானே! பாவமும் நானே!’ என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி ‘காலைக்கதிர்’ நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்குத் தீனியாகிறது.

# பாட்டும் நானே? பாவமும் நானே!




**1. கேள்வி:-** உங்களுக்கும் புலிகளுக்கும் பிரச்சினை இருந்ததாகவும், உங்களைப் புலிகள் கைது செய்து வைத்திருந்ததாகவும் பலவிதமான செய்திகள் தொடர்ந்து பரப்பப்பட்டு வருகின்றனவே. உண்மையில் என்னதான் நடந்தது? நீங்களே மனந்திறந்து உண்மையைச் சொன்னால், இந்தச் செய்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கலாமே!

**பதில் :-** எத்தனையோ இடங்களில் இதுபற்றிச்சொல்லிவிட்டேன். ஆனாலும் வதந்திகளைப் பரப்புவோர் வெறும் வாயைச்சப்பிக் கொண்டேதான் இருக்கிறார்கள். எம்மைப் பற்றி பொறாமை கொண்ட சிலருக்கு அந்த வதந்திகள் உண்மையாக இருக்க வேண்டும் என்ற ஆசை வேறு! அதனால் நான் என்னதான் பதில் சொன்னாலும் இந்த வதந்திகளுக்கு முற்றுப் புள்ளி இடப்படப் போவதில்லை. ஆனாலும், நீங்கள் கேட்டதற்காக கடைசியாக என் கருத்தை பதிவுசெய்கிறேன்.

கம்பன் கழகம், கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக எங்களுடைய தமிழ்ச் சமூகத்துடன் இணைந்தே பயணித்திருக்கிறது. எமது கழகத்தின் முயற்சிகளின் தூய்மையை நமது தமிழ்ச்சமூகம் நன்கு அறியும். இன்றுவரை எமது கழகம் செய்யும் முயற்சிகளின் வெற்றிக்கு நம் சமூகம் தரும் ஆதரவும், அன்புமே காரணமாயின. இன்று எமது கழகத்தின் சாதனையாய்ச் சொல்லப்படும் விடயங்கள் அனைத்தும் எம்மக்கள் தந்த ஆதரவால் நிகழ்ந்தவையே.

முன்னைய கூட்டணித் தலைவர்கள், அதன்பின் வந்த போராளித் தலைவர்கள், தற்போதைய நம் அரசியல் தலைவர்கள் என அனைவருமே, இதுவரை எம் கழகத்தைக் கண்ணியப் படுத்தியே வந்திருக்கிறார்கள். போராட்ட காலத்தில் பலவாகப் பிரிந்திருந்த போராளிக் குழுக்கள் அனைத்துமே கூட, எங்கள் மீதான மதிப்பினைப் போற்றியே வந்தன.

எங்களை வீழ்த்தவேண்டும் என நினைத்த சிலர்தான், புலிகளுக்கும் எங்களுக்கும் பெரிய பிரச்சினைகள் உண்டானதாய், கற்பனைக் கதைகள் பலவற்றைக் கட்டி மகிழ்ந்தார்கள். இன்றும் மகிழ்கிறார்கள். யாழ்ப்பாணத்தின் ஒரு பிரபலமான பத்திரிகைகூட இந்த முயற்சியில் பெரும்பாடுபட்டது. ஆனால், எம்மை அவர்களால் மக்கள் மனதிலிருந்து பிரித்தெடுக்க முடியவில்லை.

ஆரம்ப காலத்தில் புலிகள் எமது நட்பை நாடி நின்றது உலகறிந்த விடயம். அவர்களின் முதல் ஒலிநாடா வெளியீட்டின் போது சபையில் உட்கார்ந்திருந்த என்னை வேண்டி அழைத்துப் பேச வைத்தார்கள். எனது பேச்சு எங்கு நடந்தாலும், அவ்வழியால் தான்சென்றால், வாகனத்தை நிறுத்தி, பேச்சு முழுவதையும் கேட்டு விட்டுத்தான் செல்வேன் என்று தமிழ்ச்செல்வன் பல மேடைகளில் பகிரங்கமாக அறிவித்திருக்கிறார். எங்கள் நண்பர் புதுவை இரத்தினதுரையின் வேண்டுகோளுக்கு இணங்கி, அவர்கள் நடத்திய முத்தமிழ் விழா இயல் நிகழ்ச்சிகளை நாங்கள் தான் நடத்திக் கொடுத்தோம். கிட்டு மறைந்தபோது யாழ்.பல்கலைக்கழகத்தில் புலிகளால் நடாத்தப்பட்ட அஞ்சலிக்கூட்டத்தில், தலைமை தாங்குவதாய் ஒப்புக் கொண்டிருந்த பேராசிரியர் ஒருவர். அப்போதிருந்த சூழ்நிலைக்கு அஞ்சி தலைமறைவாகி விட புதுவையின் வேண்டுகோளுக்கிணங்கி அக்கூட்டத்திற்கு நான்தான் தலைமை தாங்கினேன். நல்லூர் ஆதீனத்தில் நடந்த எங்கள் கம்பன் விழாவில் புலிகளின் முக்கிய உறுப்பினர் எல்லாம் ‘யுனிபோர்ம்’ உடன் வந்து நிலத்தில் உட்கார்ந்து முழுநாளும் நிகழ்ச்சிகளைக் கேட்டார்கள். இப்படி எத்தனையோ சொல்லலாம்.

பிற்காலத்தில், நாம் புலிகளோடு சில முரண்பாடுகளைக் கொண்டிருந்தது பகிரங்கமான விடயம். அம் முரண்பாடுகள் எங்களின் கொள்கை சார்ந்தவை மட்டுமே. சில விட்டுக் கொடுப்புக்களை நாம் செய்யாததால் அவர்கள் எம்மேல் அதிருப்தியுற்றிருந்தார்கள். அவ்வளவே! ஆனால் அவர்கள் கடைசிவரை எம்மைக் கௌரவத்தோடுதான் நடத்தினார்கள். இன்னும் சொல்லப்போனால் புலிகளோடு முரண்பட்ட பின்னும் அவர்களால் மரியாதை செய்யப்பட்ட ஒரே அமைப்பாய் எங்கள் கழகம் தான் இருந்தது எனலாம்.

அக்காலத்தில் இருந்த புலிகளின் அதிகாரத்தோடு ஒப்பிடும்போது, நாங்கள் புள்ளியளவானவர்களாய்க்கூட இருக்கவில்லை. அவர்கள் நினைத்திருந்தால், இவ் வதந்திபரப்புவோர் போல, ஏதாவது இல்லாத பொல்லாத பழிகளைச் சொல்லி எங்களைத் துடைத்தெறிந்திருக்க முடியும். அவர்கள் அப்படிச் செய்யாததே எம்மேல் அவர்கள் கொண்டிருந்த மதிப்புக்கான சாட்சியாகும்.

புலி உறுப்பினர் சிலருடன் ஏற்பட்ட ஒரு சில கருத்து முரண்பாடுகளால் ’இனி இந்த மண்ணில் பேசமாட்டோம்’ என நாம் பகிரங்கமாய் அறிவித்த போது, அதனை தங்கள் இயக்கத்திற்கு நாம் விடுத்த சவாலாய் எடுத்துக் கொள்ளாமல், ஒன்றுக்குமூன்றுதரமாய்தமது புலனாய்வு உறுப்பினர்களை அனுப்பி எம்மை மீண்டும் பேசவேண்டும் என அவர்கள் திரும்பத் திரும்ப வேண்டிக் கொண்டார்கள்.

ஆனால் நாமோ,‘எமக்கு நேர்மையான தீர்வு கிடைக்கும் வரையும் பேசப் போவதில்லை’ என பிடிவாதம் பிடித்தோம். அப்போது யாழ். மண்ணுக்குள் இராணுவம் புகத்தொடங்கியிருந்தது. அந்த இக்கட்டான வேளையில்கூட, நேரம் ஒதுக்கி புலிகளின் புலனாய்வுத்துறைத் தலைவர் பொட்டம்மான் என்னை நேரில் சந்தித்து நடந்த பிரச்சினைகள் பற்றிக் கேட்டறிந்தார்.

புலிகளுக்கும் எங்களுக்கும் கடும் முரண் இருந்ததாகப் பேசப்பட்ட காலகட்டத்தில்கூட, திலீபனின் ஒரு நினைவுக்கூட்டத்தின் இறுதிநாளன்று, எங்கள் கழகத்தாரை அழைத்தே அவர்கள் பட்டிமண்டபம் நடத்தினார்கள். நல்லூர் வீதியில், பெரும் சனத்திரளுக்குக்கிடையில் நடந்த அக்கூட்டத்தில், புலிகளின் ஆதரவாளர்களின் சில செயல்களை நான் கடுமையாகக் கண்டித்துப் பேசினேன். அப்போது என் கருத்துப் பற்றி யாழ்ப்பாணம் முழுவதும் பரவலாகப் பேசப்பட்டது. ஆனால் அப்பேச்சில் நான் சொன்ன விடயங்களை அவர்களது தலைமை ஏற்றுக் கொண்டமையை அடுத்த திலீபனின் விழாவில் காணமுடிந்தது.

இடம்பெயர்ந்து நாங்கள் இருந்த போது, கொழும்பு செல்ல ஒருவருக்கும் ‘பாஸ்’ வழங்காத அன்றைய நிலையில், எனக்கும் கழக நண்பர்களுக்கும் பாஸ் தந்து அவர்கள் மதிப்பளித்தார்கள். அது மட்டுமல்லாமல், புலிகளின் கடைசி ‘சென்ரி’ யைத் தாண்டி வவுனியாவுக்குள் செல்ல நாம் முயன்றபோது, ஒரு புலி நண்பன் என்னை தனியே அழைத்து ’இந்த நேரத்தில் நீங்கள் கொழும்பு செல்வது புத்திசாலித்தனம் இல்லை’ என்று எம் நன்மை நோக்கி எங்களைத் தடுத்தான். பின்னர் எம் தேவையை நான் உணர்த்த, அதை ஏற்றுக்கொண்டு எங்களைப் போக அனுமதித்தான்.

புலிகள் இருந்த காலத்தில் பயந்து ஒளிந்து திரிந்துவிட்டு, இன்று அவர்களின் ஆதரவாளர்களாய்க் காட்டிக்கொள்ளும் இன்றைய தலைவர்கள் சிலரைப்போல ‘புலிச்சாயம்’ பூசி பெயர் எடுப்பதற்காக இவற்றை நான் சொல்லவில்லை. அப்படிச் செய்வதானால் அவர்கள் இருந்த போதே நான் அதனைச் செய்திருக்கலாம்.

அப்படிச் செய்ய நான் ஓர் அரசியல் வாதி அல்லன். இவை பற்றியெல்லாம் எனது ‘உன்னைச் சரணடைந்தேன்’ எனும் நூலில் எப்போதோ நான் தெளிவாக எழுதியிருக்கிறேன். அப்படியிருந்தும் திரும்பத் திரும்ப ஒரு பொய்யைச் சொல்லி அதனை மெய்யாக்கி விடலாம் என நினைக்கும் மூடர்களின் கனவு பற்றி நான் என்னதான் சொல்ல?

**உலகநாதரின் ஒப்பீனியன் * தரமான தன்னிலை விளக்கம். வாரிதியாருக்கு ஒரு ‘சல்யூட்’.**

**2. கேள்வி:-** அண்மையில் கிளிநொச்சியில் நீங்கள் ஆரம்பித்த புதிய திட்டம் பற்றி பலவிதமான விமர்சனங்கள் வருகின்றனவே. உங்கள் திட்டம் என்ன என்று மக்களுக்கு பகிரங்கமாகச் சொல்லலாமே!

**பதில் :-** நீங்கள் கேட்பதால், நம் இளையோரின் உயர்வுக்காக நாம் தொடங்கியிருக்கும் புதிய முயற்சி பற்றிச் சொல்கிறேன்.

மூன்று தசாப்தங்களாக போரின் இன்னல்களுக்கு இடையில் வளர்ந்த எமது இளைய தலைமுறை, அதனால் பல பாதிப்புகளுக்கு ஆளாகி இருக்கிறது. அப்பாதிப்புகளில் முக்கியமானதாய் நாம் கருதுவது ’ஆளுமை’ இழப்பினையேயாம். இத்தனைப் பெரிய இன்னல் பாதையைக் கடந்து வந்த பின்னும்கூட நம் இளையோர், தம் அறிவாற்றலில் யாருக்கும் ’சோடை’ போகவில்லை. ஆனால், நிகழ்ந்த ஆளுமை இழப்பு என்பது அவர்கள் அடைந்திருக்க வேண்டிய உயர் நிலைகளை அடையமுடியாமல் ஆக்கியிருக்கிறது.

இதுபற்றி நானும் எனது கழக நண்பர்களும் பல காலமாக சிந்தித்து வருகிறோம். அதிகூடிய பரீட்சை சித்திபெற்ற ஒரு மாணவனும் கூட, நம் மண்ணைத் தாண்டி தெற்கிற்குள் நுழைந்தால், அங்குள்ள மாணவர்களின் ஆளுமைக்கும் நிமிர்விற்கும் முன்னால் நின்று பிடிக்க முடியாமல் தளர்ந்து போகிறான். அதனால் அவன் கஷ்டப்பட்டு தேடிய தகுதிகளெல்லாம் ’விழலுக்கிறைத்த நீராய்’ ஆகிவிடுகின்றன. நாம் கூடி ஆராய்ந்தபோது இதற்கான இரண்டு காரணங்களை இனங்கண்டோம். முதலாவது, இந்நாட்டில் பயிலப்படும் மொழிகளில், தமிழ் மொழி தவிர்ந்த மற்றைய மொழிகளில் நம் இளையோர்க்கு ஏற்பட்டிருக்கும் பயிற்சியின்மை. இரண்டாவது, உயர் ஆளுமையாளர்களை சந்திக்கக் கிடைக்காத வாய்ப்பிழப்பு.

(09ஆம் பக்கம் பார்க்க)



காலைக்கதிர் Kalaikkathir

# அமைச்சர் வியாழேந்திரனின் தொலைபேசி அழைப்புத் தொடர்பில் விசாரணை செய்க!

## ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் மன்றில் ஆஜர்

கொலை செய்யப்பட்ட மகாலிங்கம் பாலசுந்தரத்தின் கொலை தொடர்பில் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் கையடக்க தொலைபேசி அழைப்பு தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்று மட்டக்களப்பு நீதிவான்நீதிமன்றில்கோரிக்கை விடுக்கப்பட்டது. இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் வீட்டின் முன்னாள் சுட்டுக்கொல்லப்பட்ட மகாலிங்கம் பாலசுந்தர படுகொலைத் தொடர்பில் நகர்த்தல் பத்திரம் மூலம் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் மற்றும் சட்டத்தரணி என். கமலதாஸ் ஆஜராகியிருந்தனர். குறித்த வழக்கு நீதிவான் நீதிமன்றில் நீதிபதி ஏ.சி. றிஸ்வான் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சம்பவம் நடைபெற்ற வேளையில் இராஜாங்க அமைச்சர் தன்னுடைய வீட்டிலிருந்தார் என்றும் அதன் பின்னரே அவர் அங்கிருந்து வெளியேறிச் சென்றார் என்ற தகவலும் இருக்கும் காரணத்தால் இரண்டு விடயங்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்க வேண்டும் என்று நீதிவானிடம் கோரியிருக்கின்றோம். இராஜாங்க அமைச்சர் எப்போது வீட்டைவிட்டு வெளியேறினார் என்பதை அறிவதற்காக வீதிகளில் உள்ள சிசிரிவி காட்சிகள் விசாரணை செய்யப்பட வேண்டும்.குறித்த வழக்கு தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முறையாக முன்னெடுக்காத காரணத்தால் மேற்படி வழக்கு கரடியனாறு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக நீதிவான் தெரிவித்தார் என ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு முதன் முதலில் தொடர்பை ஏற்படுத்திய இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் அந்த அழைப்பை எடுத்த இடம் மற்றும் வழியில் இருந்த சிசிரிவி காணொலிகளை உடன் பரிசீலனை செய்யவேண்டும் என்ற கோரிக்கை சட்டத்தரணிகளால் முன்வைக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். இந்த வழக்கானது எதிர்வரும் 03 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.



## பொருளாதார ரீதியாக பெண்களை வலுப்படுத்தல் தொடர்பாக மூன்று நாள் பயிற்சி மட்டக்களப்பில்!

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 'பெண்களை பொருளாதார ரீதியாக வலுப்படுத்தல் என்ற தலைப்பிலான பயிற்றுவிப்பாளர்களுக்கான மூன்று நாள் பயிற்சி மட்டக்களப்பு கிறீன் கார்டன் விருந்தினர் விடுதியில் புதன்கிழமை ஆரம்பமானது.

ஜேர்மன் ஹோப்ரேன் மற்றும் பிளேன் இன்டநெனல் நிறுவனங்களின் நிதிப்பங்களிப்பில் பெரண்டினா அபிவிருத்திச் சேவை நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்படும்'இலங்கை சமூக அமைப்புகளிலுள்ள பெண்கள் மற்றும் இளைஞர்களைக் கிராமிய தொழில் முயற்சியாண்மையில் வலுப்படுத்தல்' என்னும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இந்தப் பயிற்சிநெறி நடைபெற்றது.

நேற்று வரை நடைபெற்ற இந்தப்பயிற்சியாளர்களுக்கான பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி சிறிகாந்த் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

பெரண்டினா நிறுவனத்தின் 'இலங்கை சமூக அமைப்புகளிலுள்ள பெண்கள் மற்றும் இளைஞர்களை கிராமிய தொழில் முயற்சியாண்மையில் வலுப்படுத்தல்' என்னும் நிகழ்ச்சித்திட்டத்தின் திட்ட முகாமையாளர் எஸ்.சிவராஜாவின் தலைமையில் நடைபெறுகின்ற இந்நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர், மாவட்டத்தின் சகல பிரதேச செயலகங்களிலும் கடையாற்றும் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பெரண்டினாநிறுவனத்தின் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டுள்ளனர்.

இந்த மூன்று நாள் பயிற்சி நெறியில் வளவாளர்களாக இனோகா பிரியதர்சினி மற்றும் சுபாசினி காளிமுத்து ஆகியோர் கலந்துகொண்டு பால்நிலை பற்றிய எண்ணக்கருக்கள், பெண்களின் பொருளாதார வலுவூட்டலுக்கான சட்டகம், பெண்களின் தொழில் முயற்சி–யாண்மை. கிராமிய தொழில் முயற்சிகளில் வலுவான பெண்கள் மற்றும் இளைஞர்களின் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் உள்ளிட்ட தலைப்புகளில் விரிவுரைகளையும் பயிற்சிகளையும் வழங்கினர்.

இந்தப் பயிற்சிநெறியில் பயிற்சிபெறும் உத்தியோகத்தர்கள் மாவட்டத்தின் அனைத்துப் பிரதேசங்களிலும் உள்ள பெண்களைப் பொருளாதார ரீதியாக வலுப்படுத்துவதற்கான பயிற்சிநெறிகளை மேற்கொள்ளவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரதமரின் வங்கி கணக்கிலிருந்து பணம் கொள்ளையிடப்பட்டுள்ளதா?

## பிரதமரின் ஊடகப்பிரிவு விளக்கம்

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தனிப்பட்ட வங்கிக் கணக்கிலிருந்து பெருமளவிலான பணம் திருடப்பட்டது எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் இதுவரை முறைப்பாடு செய்யப்படவில்லை என பிரதமரின் ஊடகச் செயலாளர் ரொஹான் வெலிவிட்ட தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் –

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வங்கிக் கணக்கிலிருந்து பணம் திருடப்பட்ட சம்பவம் குறித்து பிரதமர் அலுவலகம் அறிந்திருக்கவில்லை. மேற்படி சம்பவம் குறித்து ஊடகங்களில் வெளியான செய்திகள் 'எனக்குத் தெரிந்த வகையில் தவறானவை' என்றும் விளக்கமளித்துள்ளார்.

இதேவேளை, தந்தையின் வங்கிக் கணக்கிலிருந்து பெருந்தொகை பணம் களவாடப்பட்டமை குறித்து தமக்கு எதுவும் தெரியாது என விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

பிரதமர் மஹிந்தவின் பிரத்தியேக செயலாளர் ஒருவர் இரகசியமாக வங்கி அட்டையைப் பயன்படுத்தி கோடிக் கணக்கான பணத்தை களவாடியுள்ளார் என ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து குறித்த பிரத்தியேக செயலாளர் உடன் அமுலுக்கு வரும் வகையில் பணி நீக்கப்பட்டிருந்தார்.

இவ்வாறான ஓர் பின்னணியில் தந்தையான மஹிந்தவின் வங்கிக் கணக்கில் பணம் களவாடப்பட்டன எனக் கூறப்படும் தகவல்கள் பற்றித் தெரியவில்லை என நாமல் கூறியுள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

# துருக்கி வெளிவிவகார அமைச்சர் இலங்கை வந்தடைந்துள்ளார்!



துருக்கி வெளிவிவகார அமைச்சர் உத்தியோகபூர்வ விஜயமொன்றைமேற்கொண்டு இலங்கையினை வந்தடைந்துள்ளனர்.

துருக்கி வெளிவிவகார அமைச்சருடன் 13 பேர் கொண்ட தூதுக்குழுவினர் நேற்று (வெள்ளிக்கிழமை) காலைகட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய மற்றும் இலங்கைக்கான துருக்கிய தூதுவர் ஆகியோர் குறித்த குழுவினரை வரவேற்பதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வருகை தந்திருந்தனர்.

# யாழ்.போதனா கோவிட் விடுதிகளை மீளத் திறப்பது தொடர்பில் ஆராய்வு!

யாழ். மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்கள் எண்ணிக்கை மீளவும் அதிகரித்துச் செல்லும் நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் இயங்கிவந்த கொரோனாச் சிகிச்சை விடுதிகளை மீளவும் இயக்குவது தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் தொற்று அபாயம் அதிகரிக்கும் நிலையில் எடுக்கப்படவேண்டிய முன் ஆயத்த நிலைகள் தொடர்பான உயர்மட்ட கலந்துரையாடல் நடைபெற்றது. இதன்போதே குறித்த விடயம் ஆராயப்பட்டது எனக் கூறப்படுகின்றது.

போதனா வைத்தியசாலையில் கொரோனா சிகிச்சை விடுதிகள் 2 ஏற்கனவே இயங்கி வந்த நிலையில் தொற்றாளர் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்த நிலையில் அவை பயன்பாடற்றுக் காணப்பட்டிருந்தன.

தற்போது தினசரி தொற்றாளர் எண்ணிக்கை மீள அதிகரிக்கும் நிலையில் குறித்த விடுதிகளை மீள திறப்பது தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது. கடந்த 4 மாதகாலமாக 10 இற்கும் குறைவானனோரே யாழ்.போதனா வைத்தயசாலையின் தனிமைப்படுத்தல் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் அந்த எண்ணிக்கை தற்போது 24 ஆக உயர்ந்துள்ளன. எனினும் ஒட்சிசன் தேவைப்பாடான நோயாளிகள் இதுவரை வரவில்லை எனக் கூறப்படுகின்றது.

## வவுனியா குடிவரவு குடியகல்வு திணைக்கள காரியாலயம் கொரோனாவால் மூடப்பட்டது!

கொரோனாத் தொற்று காரணமாக குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் வவுனியா பிராந்திய காரியாலயம் தற்காலிகமாக மூடப்பட்டது.

குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் வவுனியா பிராந்திய காரியாலயத்தில் கடமையாற்றும் இரு உத்தியோகத்தர்களுக்குகடந்தவியாழக்கிழமை கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் கடவு சீட்டு வீநிநோயகம், கடவுச் சீட்டு விண்ணப்பம் பெறுதல் என அனைத்துச் செயற்பாடுகளும் மறு அறிவித்தல் வரை நிறுத்தப்பட்டு பிராந்தியக் காரியாலயம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. தொற்றுக்குள்ளானவர்கள் சிகிச்சைக்காகத் தனி மைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அவர்களுடன் தொடர்பில் இருந்த உத்தியோகத்தர்களுக்கும் கொவிட் பரிசோதனை மேற்கொள்ள சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மாவட்ட நீதிமன்ற கட்டடத் தொகுதி கிளிநொச்சியில் அலி சப்ரியால் திறப்பு!

கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற கட்டடத் தொகுதி நீதி அமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான அலி சப்ரி நேற்று (வியாழக்கிழமை) பிற்பகல் 2 மணிக்குத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தத் திறப்பு விழா நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நீதி அமைச்சின் செயலாளர், உயர் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன், கிளிநொச்சி நீதிமன்ற நீதிபதி லெனின் குமார், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர், நீதிமன்ற உத்தியோகத்தர்கள, சட்டத்தரணிகள், நீதி அமைச்சின் உத்தியோகத்தர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# யாழ்.மாநகர சபையின் தொழிலாளர்களுடன் தரக்குறைவாக நடக்கும் மேற்பார்வையாளர்!

## ஆணையாளரிடம் முறையிட்டும் பயனில்லை ஐக்கிய தொழிலாளர் சங்கம் குற்றச்சாட்டு




யாழ் மாநகர சபை ஆளுகைக்குட்பட்ட சந்தையில் பணியாற்றும் மேற்பார்வையாளர் ஒருவர் அங்கு பணி புரியும் தொழிலாளர்களிடம் தரக்குறைவாக நடந்து கொள்கின்றமை தொடர்பாக மாநகர ஆணையாளரிடம் முறையிட்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என வடபிராந்திய ஐக்கிய தொழிலாளர் சங்கத்தின் தலைவர் ஆ.ஜோன்ஸ்ன் குற்றம்சாட்டினார்.

யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

உடனடியாக சம்பந்தப்பட்ட மேற்பார்வையாளர் இடமாற்றம் செய்யப்பட வேண்டும், தற்காலிக நியமன சுகாதார தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்படவேண்டும். மாநகர சுகாதார தொழிலாளர்கள் சுதந்திரமாகப் பணியாற்ற இடமளிக்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டும்.

குறிப்பாக குறித்த கோரிக்கைகள் தொடர்பில் யாழ். மாநகர சபை முன்பாக அண்மையில் போராட்டம் நடத்தியதுடன் மாநகர ஆணையாளரிடம் இது தொடர்பாகப் பலதடவைகள் முறையிட்டும் பலன் இல்லை. மாநகர முதல்வர், வடமாகாண ஆளுநர் ஆகி யோரிடம் இது தொடர்பில் முறையிட்டுள்ளதாகவும் அவர்கள் இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். அதேவேளை இது தொடர்பில் நடவடிக்கை எடுக்காவிடில் பாரிய ஆர்ப்பாட்டத்தை யாழில் மேற்கொள்வோம்.– என்றார்.

## மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்தக் கோரிக்கை!

மின்சாரதனை சிக்கனமாகப் பயன்படுத்துமாறு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காமினி லொகுகே கோரிக்கை விடுத்துள்ளார்.

குறிப்பாக நேற்று (வெள்ளிக்கிழமை) மாலை 6.30 மணி முதல் இரவு 8 மணி வரையில் மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துமாறே அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

20 மெகாவாட் மின்சார பற்றாக்குறை காரணமாகவே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## அமைச்சரவைக்கு எதிரான அடிப்படை உரிமை மனு மீதான விசாரணைகள் மார்ச் மாதம் 23 ஆம் திகதி!

நாட்டின் தற்போதைய அமைச்சரவை சட்டவிரோதமானது என உத்தரவிடுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும் திகதி குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இதற்கமைய குறித்த மனு மீதான விசாரணையை எதிர்வரும் மார்ச் மாதம் 23 ஆம் திகதி நடத்துவதற்கு உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

அன்றைய தினத்தில் மனுவிலுள்ள விடயங்களை உறுதிப்படுத்துவதற்கான ஆதாரங்களை முன்வைக்குமாறு மனுதாரர்கள் தரப்பு சட்டத்தரணிக்கு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

## பாட்டும் நானே?....

7ஆம் பக்கத் தொடர்ச்சி.....

நம் மண்ணில் ஆளுமையாளர்கள் இல்லையா? என உடன் கேட்பீர்கள்! முற்றாய் இல்லை என நான் சொல்லமாட்டேன். ஆனால் ஒருகாலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்த உயர் கல்வியாளர்கள், அதிகாரிகள், அரசியல் தலைவர்கள் என்பவர்களின் ஆளுமைத்திறனோடு ஒப்பிடும்போது இன்றைய நம் சமூகத்தின் ஆளுமைத்திறன், பூச்சியத்தை அண்மித்ததாகவே இருக்கிறது. அதனால், இன்று நம் இளையோர் பதவிகளையும் பட்டங்களையும் மட்டுமே ஆளுமையாய் நினைந்து, ஏமாந்து, உயர் ஆளுமைத் தரிசனம் இன்றிக் கிடக்கின்றார்கள்.

தெற்கில் வாழ்ந்த இளையோரோ, போர்க்காலத்திலும் தனிமைப்படாது உலகத் தொடர்பைப் பேணி வந்தார்கள். அதனால் அவர்களது மொழித்திறனும் ஆளுமைத்திறனும் மிகவும் விருத்தியாகி இருக்கிறது. அவர்கள் ஆளுமைத் திறனில் முப்பதாண்டு முன்னால் பயணிக்க, நம் பிள்ளைகள் பின்னால் பயணித்தார்கள். காலம் செய்த கொடுமை இது! இதனால் அவர்களுக்கும் நம் பிள்ளைகளுக்கும் இடையிலான ஆளுமை வேறுபாடு ஐம்பது ஆண்டுகளைக் கடந்து நிற்கிறது.

இந்த இடைவெளியை நிரப்பி நம்மவர்களின் ஆளுமையை வளர்ச்சியுறச் செய்து, பழையபடி மற்றவர்கள் நம் பிள்ளைகளின் நிமிர்வு கண்டு, வியக்கும் நிலைக்கு நம் சமூகத்தையும் நிமிரச் செய்யவேண்டும் என்பதற்காகவே எமது இந்தப் புதிய முயற்சியை நாம் தொடங்கியிருக்கிறோம்.

இன்று இத்தகைய ஆளுமைப் பயிற்சிக் களங்கள் பலராலும் பரவலாக நடத்தப்பட்டு வருகின்றன. ஆனால் அவற்றிலெல்லாம் வெறும் வகுப்பு எடுக்கும் முயற்சியே செய்யப்படுகிறது. அதனால் பெரும்பயன் கிடைக்காது என்பது எம் கருத்து. அதனாற்றான், மொழிப்பயிற்சியையும் ஆளுமைத் திறனையும் செயல்முறையூடாக நம் இளைஞர்கள் பெறவேண்டும் என நாம் நினைந்தோம்.

அதற்காக, இலங்கையின் பிறபகுதிகளிலும், வெளிநாடுகளிலும் வாழும் ஆற்றல்மிக்க மொழியியல் அறிஞர்கள், ஆளுமையாளர்கள் ஆகியோருடன் நம் இளையோர்க்கான சங்கமத்தை உண்டாக்க வேண்டும் என முடிவு செய்தோம். அச்சங்கமத்தால், இலங்கையளவில் தேவைப்படும் சிங்களமொழிப்பயிற்சியையும், உலக அளவில் தேவைப்படும் ஆங்கிலமொழிப்பயிற்சியையும் இயல்பாக உருவாக்கலாம் என்றும் உயர் ஆளுமையாளர்களின் சங்கமத்தால் நம் பிள்ளைகளின் ஆளுமையை வளர்ச்சியுறச் செய்யலாம் என்றும் நாம் கருதினோம்.

அதனால், இயல்பாகவே ஆளுமைத்திறன்கொண்ட இளையோர் சிலரை இனம்கண்டு, அவர்களை வேற்றுமொழியாளர்களுடனும், ஆளுமையாளர்களுடனும் ஒன்றாகத் தங்க வைத்து, மொழித்திறன், ஆளுமைத்திறன் ஆகியவற்றை பயிலச்செய்ய வேண்டும் என்பது எங்களது முதற் திட்டமாய் இருக்கிறது. ஆங்கிலத்தை ஆங்கிலேய ஆசிரியர்களுடனும், சிங்களத்தை அம்மொழிசார்ந்த ஆசிரியர்களுடனும் நாள்முழுதும் உடன் இருந்து செயல்முறையால் அவர்களைப் பயிலச் செய்ய வேண்டும் என நினைத்திருக்கிறோம்.

மொழிப்பயிற்சியை ஏற்படுத்தியபின்பு, ஆளுமை மிக்கவர்களை சந்திக்கவும், அவர்களோடு உடன் இருக்கவும் செய்து, அவர்களின் ஆளுமைத்திறனை நம் இளையோர்உள்வாங்கும்படியாகச்செய்யவேண்டும் என்பது எமது அடுத்த திட்டமாய் இருக்கிறது. அதற்காக ஆளுமைமிக்க அரசியல் தலைவர்கள், நிறுவனத் தலைவர்கள், தொழிலதிபர்கள், வெளிநாட்டுத் தலைவர்கள் ஆகியோரைச் சந்திக்கச் செய்து, அவர்களோடு ஓரிரு தினங்கள் இவர்களைத் தங்க வைத்து, அதன்மூலம் நம் இளையோரின் ஆளுமைத்திறனை வளர்க்கத்தெடுக்க வேண்டும் என தீர்மானித்திருக்கிறோம்.

இங்குதான், நம் இளையோர்கள் ஆளுமைமிக்க இராணுவ உயரதிகாரிகளைச் சந்தித்து, அவர்களோடு நம் பிரச்சினைகளைப் பற்றி சமநிலையில் நின்றுபேசி, தீர்வு காணும் துணிவைப் பெறுவதற்காகவும் இராணுவத்தின் இறுக்கமான கட்டுப்பாடுகளைத் தெரிந்து கொள்வதற்காகவும் அவர்களை இராணுவ முகாம்களுக்கும் அழைத்துச் செல்லவேண்டும் என்றுகூடத் திட்டமிட்டிருக்கிறோம். யாழ்ப்பாணத்தின் புகழ்பெற்ற ஹாட்லி, சென். ஜோன்ஸ் கல்லூரிகளில் அதிபராய் இருந்த பூரணம்பிள்ளை அவர்களே, இத்தகைய வழிமுறை ஒன்றை எமக்கு முன்பு ஒருதரம் சொல்லியிருந்தார்.

அதுமட்டுமன்றி, நம் இளையோர்க்கு இத்தேசத்தில் வாழும் பிற மொழிச் சமூகங்கள், பிற மதங்கள் என்பவற்றைப் பற்றியும் ஆழ்ந்த புரிந்துணர்வை உண்டாக வேண்டும் என்பதற்காக, அத்தகைய இடங்களில் நம் இளையோரை நேரடியாகத் தொடர்புபடுத்தி அனுபவம் பெறச் செய்யவேண்டும் என்பதும் எம் எண்ணமாய் இருக்கிறது.

ஒரு சிறு தேசத்திற்குள் வாழ்ந்தாலும், நம்மவர்க்கு அருகில் இருக்கும் மதங்கள் பற்றியோ, அம்மதத்தாரின் வழிபாட்டு முறைகள் பற்றியோ பெரும்பாலும் தெரிவதில்லை. அதுபோலவே அருகிருக்கும் வேற்று இன மக்களின் வாழ்க்கை முறை, உணவுமுறை, கலாசாரம், பண்பாடு என்பவை பற்றியும் நம்மவர்கள் தெரிந்திருப்பதில்லை. இவற்றையெல்லாம் தெரிந்து கொண்டால் நம் இளையோரிடம் பரந்த சிந்தனையும் மற்றைய சமூகங்களுடன் சமப்பட்டு இணைந்து வாழும் திறனும் தாமாக உண்டாகும். அதனால் நம் இளையோரின் ஆளுமை மிக வேகமாக வளரும். அது மட்டுமல்லாமல் நம் இனத்தினதும், மொழியினதும், மதத்தினதும் பெருமைகளையும் மற்றவர்க்கு உணர்த்துகிற வாய்ப்பும் அவர்களுக்குக் கிட்டும். அதனால்தான் இப்பயிற்சியில் ஈடுபடப்போகும் இளையோரை மற்றைய இன, மத, மொழி மாணவர்களுடன் கலாசாரப் பரிவர்த்தனம் செய்யவேண்டும் எனவும் திட்டமிட்டுள்ளோம்.

இவையெல்லாம் எமது கனவுகள்! ஒரு காலத்தில் இலங்கை முழுவதிலுமாக தமிழினத்தார் கொண்டிருந்த ஆளுமைமிக்கத் தலைமைத்தன்மையை மீட்டெடுக்கும் முயற்சியாகவே இத்திட்டங்களை நாம் வகுத்திருக்கிறோம். நடந்து முடிந்த போரையும் அதன் பாதிப்புக்களையும் சொல்லிச் சொல்லி, எவ்வளவு காலத்திற்குத்தான் எம் வாழ்க்கையை நாம் ஓட்டுவது? நிகழ்கால முயற்சியால், இறந்தகாலப் பாதிப்புக்களை நீக்கி வருங்காலத்திலேனும், நம் கைவிட்டு நழுவிப்போன வீரியத்தை நாம் மீட்டெடுக்கவேண்டாமா? அதற்காகவே இலக்கிய முயற்சி எனும் எம் எல்லையைக் கடந்து இத்தகைய ஒரு பாரிய சமூகப்பணியை முன்னெடுக்கத் தொடங்கியிருக்கிறோம்.

**உலகநாதரின் ஒப்பீனியன்:– சூசூசூப்பர் 'மீண்டும் தொடங்கும் மிடுக்கு'**

காலைக்கதிர் Kalaikkathir

## பயங்கரவாதத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சட்டத்திருத்தம் எந்த மேம்பாடான அம்சத்தையும் கொண்டிருக்கவேயில்லை என்ற தகவலை ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் சம்பந்தப்பட்ட உயர் தரப்புகளுக்கு சுமந்திரன் நேற்று உடனடியாக விவரமான குறிப்புகளுடன் தெரியப்படுத்தினார் எனவும் அறிய வந்தது.

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த சட்டத்திருத்தத்திற்கான வரைவை வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் சமர்ப்பித்தார் எனக் கூறப்படுகின்றது. அதை அமைச்சரவை எந்த மாற்றமுமின்றி அப்படியே ஏற்றுக் கொண்டது. அதனை அடுத்து அது வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

அந்தச் சட்டமூலம் குறித்து சுமந்திரன் கூறியவை வருமாறு:-

மிக மோசமான - கொடூரமான - ஈவிரக்கமற்ற - மனிதாபிமானமற்ற - மனித நேயத்துக்கு மாறான அடிப்படைப் பண்புகளை கொண்டது பயங்கரவாத தடுப்புச் சட்டம். கைது செய்தவர்களை நீண்ட காலம் விசாரணைகள் இன்றி, பிணை வழங்காமல், வழக்கு தொடுத்தது பின்னர் குற்றம் சுமத்தப்பட்டவர் என்ற நிலையில், இருபது, முப்பது வருடங்கள் தாண்டியும் தடுத்து வைக்கும் இச்சட்டத்தின் மோசமான பகுதி மாற்றப்படவில்லை.

ஆக, சந்தேகநபர் என்ற பெயரில் 18 மாத காலம் விசாரணையின்றி தடுப்புக்காவலில் வைத்து இருக்கலாம் என்பது 12 மாதங்களாக - ஒரு வருடமாக - குறைக்கப்பட்டுள்ளது. ஆனால் அதற்குள் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு விட்டால், வழக்கு முடியும் வரை இருபது, முப்பது வருடங்கள் கூட தடுத்து வைக்கும் முறைமையில் எந்த மாற்றமும் இல்லை.

இச் சட்டத்தின் கீழான தடுப்புக்காவல் கைதிகளை அவர்களது சட்டத்தரணிகள் பார்வையிட அனுமதி வழங்கப்படும் என்று ஏற்பாடு புதிதாக சேர்க்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. ஆனால் அது புதிய விடயமே அல்ல. ஏற்கனவே பொலிஸ் மா அதிபரின் உத்தரவு மற்றும் குற்றவியல் நடைமுறைச் சட்ட கோவையில் அண்மையில் செய்யப்பட்ட திருத்தம் ஆகியவை மூலம் நடைமுறைக்கு வந்த ஒழுங்குதான் இது. புதிய ஏற்பாடு அல்ல.

தடுப்புக் காவல் கைதிகள் நீதிவான் நேரில் சென்று பார்வையிடலாம் என ஒரு ஏற்பாடு புதிய வரைவில் சேர்க்கப்பட்டுள்ளது. ஆனால் அதனால் பயன் ஏதும் ஏற்படப் போவதில்லை. எல்லாக் கைதிகளையும்தான் சம்பந்தப்பட்ட நீதிவான்கள் சென்று பார்வையிடலாம் என்பதுதான் இப்போதுள்ள சட்ட ஏற்பாடு. ஆனால் நீதவான்கள் எப்போது சென்று அவர்களைப் பார்த்து இருக்கின்றார்கள்? சாதாரண கைகளையே சென்று பார்க்கும்படி சட்ட ஒழுங்கு இருந்தும் அதைச் செய்யாத நீதிவான்கள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் இருக்கும் கைதிகளையா போய்ப் பார்வையிடப் போகின்றார்கள்?

இந்தச் சட்டமூலம் தொடர்பாக சர்வதேச சமூகமும், மனித உரிமைகள் அமைப்புகளும் தொடர்ந்து சுட்டிக்காட்டி வந்த பிற்போக்குத்தனமான அம்சங்களில் எதுவுமே தற்போது வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்தில் திருத்தப்படவில்லை. ஆகவே இந்த உத்தேச திருத்தத்தின் பின்னரும், தொடர்ந்தும் மிக மிக ஆபத்தான, கொடூரமான, கெடுதியான, தீங்கான சட்டமாகவே இது நீடிக்க போகின்றது. அதை அனைத்து மட்டங்களிலும், முழு அளவில் விமர்சித்து, குறைகளை அம்பலப்படுத்தி, இலங்கை அரசின் முகத்திரையைக் கிழிக்கும் - அதற்காக இந்தச் சட்டமூலம் பற்றிய முழு விடயங்களையும் அக்குவேறு ஆணிவேறாக விமர்சிக்கும் எமது நடவடிக்கை முழு வீச்சில் தொடரும். - என்றார்.

---

## '13' தமிழ் மக்களுக்குத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் தமிழ்க் கட்சிகள், இந்தியப் பிரதமர் மோடிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் தொடர்பில் தெளிவுபடுத்தும் ஊடகவியாளர் சந்திப்பு யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமஷ்டி கட்டமைப்பில், சுயநிர்ணய தீர்வைத்தான் நாம் எதிர்பார்க்கின்றோம். நாங்கள் தெளிவாகச் சிந்தித்து இந்த முடிவை எடுத்துள்ளோம். ஒரு நாளும் 13ஆவது திருத்தம் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வைத் தராது. அதிலும் நாம் தெளிவாக இருக்கின்றோம்.

இந்தநிலையில் ஒரு கட்சி எமக்கு எதிராகப் பிரசாரம் செய்வதாக நினைத்து, தமிழ் மக்களைக் குழப்புவதற்காகப் பேரணிகளை ஏற்பாடு செய்துள்ளது. நாம் இந்தியாவுக்குச் சோரம் போகமாட்டோம். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் நாம் அவர்களிடமிருந்து பெற வேண்டியதைப் பெறுவோம்.

வடக்கு - கிழக்கு இணைப்பு தொடர்பில் கத்திக் கத்திக் களைத்து விட்டோம். அதற்காக அப்படியே இதை விட்டு விட்டோம் என்று நினைக்க வேண்டாம். தமிழர் இருப்புக்கு நாம் ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டும் - என்றார்.

---

## கஜன்களின் தீர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெளிவுபடுத்தும் ஊடகவியாளர் சந்திப்பு யாழில் நேற்று நடைபெற்றபோதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் மத்தியில் பொய் சொல்வதற்குத் தகுதி வேண்டும். 13ஆவது திருத்தச் சட்டத்தை நாங்கள் தீர்வாக ஏற்றுக் கொண்டோம் எனக் கஜேந்திரகுமார் அணியினர் பொய்ப் பிரசாரம் மேற்கொண்டுள்ளார்கள்.

அவ்வாறு பொய்ப் பிரசாரம் மேற்கொள்பவர்கள் என்ன தீர்வை முன்வைக்கப் போகிறார்கள் அல்லது தீர்வு விடயத்தில் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று கூற முடியுமா? ஏன் அவர்கள் இவ்வாறு செயற்படுகிறார்கள் எனத் தெரியவில்லை.

அதேநேரம் கஜேந்திரகுமார் அணியினர் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ளார்கள். யாரை முதலமைச்சராக முற்படுத்தவது என்பது தொடர்பில் கட்சிக்குள் போட்டி நிலை காணப்படுகின்றது.

அவ்வாறான நிலையில் ஏன் இவ்வாறு மக்களைக் குழப்பும் செயற்பாட்டில் ஈடுபடுகின்றார்கள் என நான் கேட்க விரும்புகின்றேன்.

அத்தோடு அவர்களது கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் அதாவது தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பியுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் அவர்கள் என்ன தீர்வை முன்வைத்திருக்கின்றார்கள் என்று யாருக்காவது தெரியுமா? அவர்களுடைய தீர்வு ஒற்றையாட்சிக்குள் அமைகின்றது. எனவே, மக்களை இனியும் அவர்கள் ஏமாற்றிக் கொண்டிருக்க முடியாது. இவர்கள் பொய்யுரைக்கின்றார்கள் என்று மக்களுக்கு நன்கு விளங்கும் - என்றார்.

---

## நீதி அமைச்சுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் மழைக்கு மத்தியில் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நண்பகல் வரை ஓ.எம்.பி. அலுவலக அமர்வுகள் இடம்பெற்று நிறைவடைந்த நிலையில் நீதி அமைச்சர் அலி சப்ரி தலைமையிலான அணியினர் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டம் இடம்பெற்ற இடமான பிரதான வாயில் வழியாக வெளியேறாது மாற்றுப்பாதையூடாக விரைவாக வெளியேறிச் சென்றனர்.

---

## பூஸ்டர் செலுத்தியவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனக் கச்சதீவு தூய அந்தோனியார் ஆலயத்தின் அருட்தந்தை வசந்தன் அடிகளார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா போடர் நிலைமை காரணமாக இந்திய பக்தர்களுக்கு இம்முறையும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இலங்கையைச் சேர்ந்த 500 பேர் மட்டுமே கச்சதீவு திருவிழாவில் பங்கேற்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் திருவிழாவில் பங்கேற்கும் அனைவரும் பூஸ்டர் டோஸையும் பெற்றிருக்க வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றார்

கச்சதீவு திருவிழா தொடர்பில் யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்திலேயே மேற்கண்டவாறு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது

---

# கோட்டா அரசின் கைக்கூலியாக வடக்கில் செயற்படும் முன்னணி

## போட்டுத் தாக்குகின்றார் சுரேஷ்; போலிப் பிரசாரத்தை மக்கள் எவரும் நம்பவே கூடாது எனவும் வலியுறுத்து

(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் கோட்டாபய அரசு நினைக்கும் விடயங்களை வடக்கு மாகாணத்தில் நிறைவேற்றுகின்றார்கள் என்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதி ஒன்றில் ஆறு தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் கூட்டாக நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:-

13ஆவது திருத்தச் சட்டத்தை நாம் தமிழரின் தீர்வாக ஒருபோதும் ஏற்கவில்லை. அதனை ஏற்கப்போவதுமில்லை. ஆனால், தற்போதுள்ள பூகோள அரசியல் நிலையில் தமிழ் மக்களைப் பாதுகாக்க அதாவது வடக்கில் இராணுவ மயமாக்கல், சிங்களக் குடியேற்றங்களைத் தடுத்து தமிழ் மக்களின் உரிமையைப் பாதுகாப்பதற்காக ஏற்கனவே இந் தியாவின் தலையீட்டில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட அரசியல் சாசனத்தில் உள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துமாறு கோரியே ஆறு தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து இந்தியப் பிரதமருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளோம்.

அந்தக் கடிதத்தின் தொடர்ச்சியாக நாம் டில்லி சென்று இந்தியப் பிரதமரைச் சந்தித்து அடுத்தகட்டமாக முன்னெடுக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளோம். ஆனால், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் மக்கள் மத்தியில் போலிப் பிரசாரத்தை மேற்கொள்வது போல் நாங்கள் 13ஆவது திருத்தச் சட்டத்தை தீர்வாக ஏற்றுக்கொள்ளவில்லை; ஏற்றுக்கொள்ளப்போவதுமில்லை. ஆனால், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் கோட்டாபய அரசு எதைச் செய்ய நினைக்கின்றார்களோ அதனை வடக்கில் நிறைவேற்றுகின்றார்கள். அதாவது தற்போது அரசின் நிகழ்ச்சி நிரலுக்கு வடக்கின் முகவர்களாகச் செயற்படுகின்றார்கள் என்றுதான் கூற வேண்டும்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 13ஆவது திருத்தம் தேவையில்லை; அபிவிருத்தி மட்டும் போதும் எனக் கூறுகின்றார். அதேபோல் அரசில் உள்ளவர்களும் அதனைக் கூறுகின்றார்கள். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரும் வடக்கில் அந்தக் கோரிக்கையையே செயற் படுத்துகின்றார்கள்.

கட்சியிலிருந்து மணிவண்ணன் பிரிந்து சென்றுவிட்டதால் தமது கட்சியை மணிவண்ணன் கொண்டு சென்று விடுவார் என்பதற்காக கட்சியில் உள்ளோருக்கு ஏதாவது ஒரு வேலையைக் கொடுக்க வேண்டும்தானே. அதற்காகத்தான் 13 ஆவது திருத்தச் சட்டத்தைச் சவப்பெட்டியில் வைத்து மக்கள் மத்தியில் ஊர்வலமாகக் கொண்டு செல்கின்றார்கள். அவர்கள் தமது கட்சியைக் காப்பாற்றுவதற்காக இவ்வாறு போலிப் பிரசாரத்தை மேற்கொள்கின்றார்கள்.

மக்களை ஏமாற்றி கோட்டாபய அரசின் நிகழ்ச்சி நிரலுக்கேற்பத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் செயற்படுகின்றார்கள். எனவே, மக்கள் போலிப் பிரசாரங்களை நம்பக்கூடாது - என்றார்.

# புலிகளுக்கு நிதி சேகரித்த குற்றச்சாட்டில் இலங்கைப் பெண் சென்னையில் கைது!

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புக்கு நிதி திரட்டிய குற்றச்சாட்டில் பெண்ணொருவர், சென்னையில் கைதுசெய்யப்பட்டுள்ளார் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இலங்கையைச் சேர்ந்த மேரி பிரான்சிஸ்கோ எனும் குறித்த பெண் 2018ஆம் ஆண்டு சென்னை வந்து, அண்ணா நகரில் வீடெடுத்து தங்கியிருந்துள்ளார்.

குறித்த வீட்டு முகவரியில் ரேன் கார்டு உள்ளிட்ட ஆவணங்களையும் பெற்றுக் கொண்டுள்ளார் எனவும் குறித்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இருக்கின்றதை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)என். ஶ்ரீகாந்தா தெரிவித்தார்.

13ஆவது திருத்தம் தொடர்பில் தமிழ்க் கட்சிகள், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் தொடர்பில் தெளிவுபடுத்தும் ஊடகவியாளர் சந்திப்பு யாழில் நேற்று நடைபெற்றபோதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் இப்போது என்ன செய்தோம் என்று தெளிவாகக் கூற வேண்டிய பொறுப்பு உள்ளது. புதிய அரசமைப்பு வருமா? வராதா? என்று உறுதியாகக் கூற முடியாது. அப்படி வந்தாலும் அதில் சிங்கள, பௌத்த மேலாதிக்கம் மட்டுமே அதில் இருக்கும். இது மட்டும் உறுதி. ஏனென்றால் இதுதான் நடந்தது.

எமது கடந்த கால அனுபவம் இது. இந்திய - இலங்கை ஒப்பந்தம் ராஜீவ் காந்தி காலத்தில் எழுதப்பட்டபோது தமிழ் மக்களின் தீர்வு தொடர்பில் அன்று வாக்குறுதி எமக்கு வழங்கப்பட்டது.

அதன் உரித்து இந்தியாவுக்கு இருக்கின்றது என்பதன் அடிப்படையிலேயே நாம் அந்நாட்டுப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் அனுப்பியுள்ளோம். 13ஆவது திருத்தம் தமிழ் மக்களின் முழுமையான பிரச்சினைக்குத் தீர்வு தரும் என்று ஒருநாளும் நாம் கூறவுமில்லை; ஏற்றுக்கொள்ளவும் இல்லை.

ஒன்றுமே இல்லாமல் இருக்கும் இடத்தில் சட்ட ரீதியாக அமுல்படுத்துமாறு கூறிய 13 ஆவது திருத்தத்தை முதலில் அமுல்படுத்தினால் அதில் உள்ள சிறிய விடயங்களை என்றாலும் நாம் பெறுவதற்கு முயற்சிக்கலாம்.

ஒன்றுமே இல்லாமல் இருக்கும் இடத்தில் இருக்கின்றதை என்றாலும் நாம் பெறுவதற்கு முயற்சிக்க வேண்டும். ஏனென்றால் எமது தமிழ் மக்களின் இருப்பு தற்போது அழிந்து வருகின்றது; அழிக்கப்பட்டு வருகின்றது. குறிப்பாக சிங்களக் குடியேற்றம் இடம்பெற்று வருகின்றது. ஆகவே, இருக்கின்றதை முதலில் அமுல்படுத்துங்கள் என்றுதான் கூறுகின்றோம் - என்றார்.

# வயலில் மயங்கிய விவசாயி மரணம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜன.29

வவுனியா பம்பைமடு வயலில் வேலை செய்து கொண்டிருந்த விவசாயி ஒருவர் மயங்கி வீழ்ந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

கந்தையா சிரேஸ்குமார் என்னும் பம்மைமடுவைச் சேர்ந்த 45 வயதுடைய விவசாயியே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

27ஆம் திகதி வயலில் வேலை செய்து கொண்டிருந்த சமயம் மயக்கம்போட்டு வீழ்ந்தவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டபோதும் சிகிச்சை பலனின்றி பரிதாபகரமாக உயிரிழந்தார்.

மரண விசாரணையை மேற்கொண்ட திடீர் மரணவிசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் உடலத்தை பிரேதபரிசோதனைக்கு ஒப்படைக்க உத்தரவிட்டார்.

# மட்டக்களப்பில் 1,300 பேருக்கு ஒமிக்கிரோன் வைரஸ் தொற்று!

## வைத்தியர் சுகுணன் தகவல்

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஓமிக்ரோன் வைரஸ் எனச் சந்தேகிக்கப்படும் வைரஸ் நோயால் 40 கர்ப்பிணி தாய்மார்கள் உட்பட 1,300 பேருக்கு நோய் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் கடந்த ஒருவாரத்தில் 22 வயதுடைய யுவதி ஒருவர் உட்பட 6 பேர் உயிரிழந்துள்ளனர் என மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கே. சுகுணன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட கொரோனாத் தடுப்பு செயலணி கூட்டம் மாவட்ட செயலகத்தில் செயலணியின் தலைவரும் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தலைமையில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கே. சுகுணன் ஊடகங்களுக்கு தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

திடிரென எமது நாடு உட்பட உலகம் பூராகவும் ஓமிக்ரோன் கொரோனா வைரஸின் தாக்கத்தால் மிக அதிகமானோர் பாதிக்கப்பட்டு வருகின்றனர். அந்த விதத்தில் மேற்கு மாகாணமான கொழும்பு கம்பஹா தவிர்ந்து கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரித்துள்ளது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடந்த வியாழக்கிழமை 100 இற்கு மேற்பட்ட நோயாளிகளும் 20 இற்கு மேற்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களும் இந்த நோய்தாக்கம் கண்டறியப்பட்டுள்ளமையையடுத்து மாவட்டத்தில் 40 இற்கு அதிகமான கர்ப்பிணி தாய்மர்கள் ஒமிக்ரோன் என சந்தேகிக்கப்படும் வைரஸ் தாக்கத்தால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 3 தினங்களில் 500 நோயாளிகள் அடையாளம் காணப்பட்டமையையடுத்து 1300 பேருக்கு நோய் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் இன்று 22 யுவயது வதி ஒருவர் உயிரிழந்துள்ளதையடுத்து இரண்டு யுவதிகள் உட்பட 6 பேர் கடந்த ஒருவாரத்தில் உயிரிழந்துள்ளனர்.

கடந்த முறை டெல்டா வைரஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களை வைத்துப் பராமரிப்பதற்கு சிரமப்பட்டிருந்தோம். ஆனால், இந்தமுறை வந்திருக்கின்ற ஓமிக்கிரோன் வைரஸ் மிக அதிகளவானவர்களை மிக குறுகிய காலத்தில் நோயால் பாதிப்படையச் செய்து கொண்டிருக்கின்றது. இந்தத் தாக்கம் ஏற்பட்டதையடுத்து எங்களுக்கு எதிர்காலத்தை நோக்கிய நிச்சயமற்ற தன்மை ஏற்பட்டுள்ளதுடன் இந்த நோய்தாக்கம் எம்மைத் திக்குமுக்காடவைத்துள்ளது. ஏன் என்றால் வைத்தியசாலைகளில் வைத்து பராமரிப்பதற்கான போதிய இடங்கள் இல்லை.

ஆகவே, பொதுமக்கள் இந்த ஓர் அபாயத்தை உணர்ந்தவர்களாக ஒவ்வொரு நடைமுறைகளையும் பின்பற்ற வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம்.

இன்று இலங்கையில் இருக்கின்ற இந்த பொருளாதாரச் சீரிழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்ற இந்த நிலைமை கொரோனாத் தாக்கத்தால் ஏற்பட்ட இந்த நிலைமையை மேலும் அதிகரிக்கின்ற விதமாக எமது நடவடிக்கைகளைச் செய்ய முடியாது. எனவே, தேவையற்ற விதத்தில் கூட்டம் கூடுதலை நிறுத்தவேண்டும்.

பிறந்தநாள் வைபவங்கள் மற்றும் வேறு சமூக வைபவங்களுக்காக ஒன்று கூடுவதை நிச்சயமாகத் தவிர்த்துக் கொள்ளவேண்டும். அதேவேளை ஒன்று கூடுவதற்கு சுகாதார அதிகாரிகளின் அனுமதியைப் பெறவேண்டும்.

இது தொடர்பாக மாவட்டத்திலுள்ள பிரதேச செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள், பொலிஸ் நிலையங்கள், அனுமதி வழங்குதல் மற்றும் சட்ட நடவடிக்கை தொடர்பாகக் கலந்துரையாட உள்ளோம்.

எனவே, மக்கள் சுகாதார அமைச்சால் வழங்கப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளுக்கு ஏற்ப நடந்து கொள்ள வேண்டும். முகக் கவசம் அணிவது என்பது மிக மிக முக்கியமானது. சமூக இடைவெளி என்கின்ற ஒரு மீற்றர் இடைவெளி மற்றும் கை சுகாதாரம் பேனவேண்டும்.

இந்த வைரஸ் நோயை உலகத்தில் இருந்து இல்லாமல் ஒழிப்பதற்கு தான் இந்த தடுப்பூசி வழங்கப்படுகின்றது இந்த தடுப்பூசி மூலம் கடந்த காலத்தில் பலபல தொற்று நோய்கள் இல்லாமல் செய்யப்பட்டுள்ளன.

எனவே, இந்த கொரோனாத் தொற்றை இந்த உலகத்தை விட்டு இல்லாமல் செய்யப்பட வேண்டும் என்றால் இந்த தடுப்பூசி அதற்குள்ள விதத்தில் ஏற்றிக் கொள்ளவேண்டும்.

எமது நாட்டைப் பெறுத்தமட்டில் 12 வயது தொடக்கம் 15 வயதான மாணவர்களுக்கு பைஸர் தடுப்பூசி ஒரு டோஸ் ஏற்றப்படுகின்றது, 16 வயதில் இருந்து 19 வயது மாணவர்களுக்கு 2 டோஸ் 3 மாதகால இடைவெளியில் ஏற்றப்படுகின்றது.

20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 3 ஆவது தடுப்பூசியான பூஸ்டர் ஊசி ஏற்ற அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது எனவே நோய்வாய்ப்பட்டவர்கள் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் கர்ப்பிணிதாய்மார்கள், முக்கியமாக இந்தத் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்றில் இருந்து புதிய கட்டுப்பாடுகள், புதிய விதிமுறைகள், புதிய அறிவுறுத்தல்கள் வழங்கப்படும். அதில் அரசியல்வாதிகள் உயர் அதிகாரிகள் என உயர்வு தாழ்வு பார்க்காது “சட்டம் அனைவருக்கும் சமம்” என்ற விதத்தில்தான் சுகாதார நடவடிக்கை எடுக்கப்படும். எனவே, அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். ஒத்துழைப்புக் கொடுக்க மறுப்பவர்களுக்கு சட்டநடவடிக்கை எடுக்கப்படும்.

முதலாவது அலையின் போது கொரோனா வைரஸின் அல்பா திரிவு வைரஸ்தான் எங்களைத் தாக்கியிருந்தது. இரண்டாவது அலையின் போது பீற்றா, காமா எனப்படுகின்ற தாக்கியிருந்தது மூன்றாவதாக அலையில் அதிகளவு உயிர்சேதத்தையும் அதிகளவு தொற்றையும் ஏற்படுத்தியிருந்தது. டெல்டா மிகவும் ஓர் அபாயமான வைரஸாகக் கணிக்கப்பட்டிருந்தது.

ஆனால், இப்பொழுது உலகத்தில் 99 வீதமான கொவிட் 19 இற்கு காரணமாக இந்த ஒமிக்குரோன் வைரஸ் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே, மட்டக்களப்பில் இருந்து மாதிரிகளை அனுப்பியுள்ளோம். இருந்தாலும் இங்கு காணப்படுகின்ற அனைவருமே ஒமிக்கிரோன் வைரஸால் தான் பாதிக்கப்பட்டுள்ளனர் எனச் சந்தேகிக்கின்றோம். அது விரைவில் விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்படும். - என்றார்.

# காய்ச்சல், சளி, வயிற்றுப்போக்கு, வாந்தி அறிகுறியான மாணவர்களை பாடசாலைகளுக்கு அனுப்ப வேண்டாம்!

காய்ச்சல், சளி, வயிற்றுப்போக்கு மற்றும் வாந்தி போன்ற அறிகுறிகள் காணப்படும் மாணவர்களை பாடசாலைக்கு அனுப்ப வேண்டாம் என மாணவர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட மருத்துவ நிபுணர் சன்ன டி சில்வா இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டில் தற்போது மாணவர்கள் மத்தியில் கொரோனா, வைரஸ் காய்ச்சல் மற்றும் டெங்கு காய்ச்சல் போன்ற நோய்கள் பரவும் வீதம் அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான அறிகுறிகள் உள்ள மாணவர்களைப் பாடசாலைக்கு அனுப்பினால், அவர்களுக்கு ஓய்வெடுக்க நேரமில்லை எனவும், அவர்களின் உடல்நிலை மோசமாகிவிடும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், வைரஸ் காய்ச்சலுக்கு சிகிச்சை இல்லை எனவும், மாணவர்களை வீட்டில் வைத்து ஓய்வெடுக்க அனுமதிப்பது சிறந்த வழி எனவும் அவர் கூறியுள்ளார்.

அவர்களுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருந்தால், பாடசாலையில் உள்ள மற்ற மாணவர்களுக்கும் அது பரவக்கூடும் என லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் சன்ன டி சில்வா எச்சரிக்கை விடுத்துள்ளார். மேலும், மாணவர்களுக்கிடையே பரவல் மட்டுப்படுத்தப்பட்டாலும், அது தேவையற்ற வகையில் பாடசாலைகளை மூடுவதற்கு வழிவகுக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், சிறுவர்களுக்கு காய்ச்சல், சளி, வயிற்றுப்போக்கு மற்றும் வாந்தி போன்ற அறிகுறிகள் இருந்தால் அல்லது அவர்கள் உணவை மறுத்தால் அல்லது அவர்களின் நடத்தையில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டால் மருத்துவ ஆலோசனையைப் பெற வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

வைத்திய ஆலோசனை பெற்று முறையான சிகிச்சை எடுத்துக்கொள்வது அவசியமானது எனவும் லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட மருத்துவ நிபுணர் சன்ன டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஒவ்வொருவரும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதும், நெரிசலான இடங்களில் நடமாடுவதைத் தவிர்ப்பதும் மிக மிக முக்கியமானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# டெங்கு நோயைத் தடுக்க விசேட வேலைத் திட்டம்!

நாட்டில் டெங்கு நோய் அதிகரித்து வருவதால் அனைத்து அரச நிறுவகங்களின் பங்களிப்புடன் நோய் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக வெற்றிகரமான இணைந்த வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறைப் படுத்துவதற்கு ஜனாதிபதி செயலகம் தற்பொழுது நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற அமைச்சரவையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# கட்டாரில் இலங்கையர் சுட்டுக் கொலையானார்

கட்டாரின் டோஹாவில் அடுக்குமாடி கட்டடம் அருகே நடந்த துப்பாக்கிச் சூட்டில் காவலர் ஒருவர் கொல்லப்பட்டார்.

அடுக்குமாடி குடியிருப்புக்குள் நுழைவதற்கு இளைஞர் ஒருவர் அடையாள அட்டையை கோரியமை தொடர்பில் ஏற்பட்ட தகராறில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

இதனை அடுத்து சம்பவ இடத்துக்கு திரும்பிய இளைஞர் காவலாளி மீது துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர்.

சம்பவத்தில் கொலை செய்யப்பட்டவர் இலங்கையர் என்பது பின்னர் தெரியவந்தது.

# 1,800 ரூபாவிற்கு சீமெந்து விற்பனை!

சுற்றிவளைப்புகளை மேற்கொண்டாலும், சில வர்த்தகர்கள் அதிக விலைக்கு சீமெந்தை தொடர்ந்தும் விற்பனை செய்கின்றனர் என நுகர்வோர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

பெரும்பாலான பகுதிகளில், சீமெந்து மூடையின் விலை 1,600 முதல் 1,800 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நுகர்வோரிடமிருந்து கிடைக்கும் முறைப்பாடுகள் காரணமாக, நுகர்வோர் அதிகார சபை, கடந்த சில நாள்களாக, நாட்டின் பல பாகங்களில், அதிக விலைக்கு சீமெந்தை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளது.



# டயகம சந்திரிகாமம் தோட்டத்தில் தீ விபத்து; வீடு எரிந்து நாசம்!

டயகம பொலிஸ் பிரிவிற்குட்டபட்ட சந்திரிகாமம் தோட்டத்தில் குடியிருப்பில் கடந்த வியாழக்கிழமை இரவு ஏற் பட்ட திடீர் தீ விபத்தில் தொடர் லயன்குடியிருப்பில் ஒரு வீட்டுக்குள் ஏற்பட்ட தீயால் குறித்த வீடு முற்றாக எரிந்துள்ளது. இதனால் இந்த வீட்டில் இருந்த 3 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தீ ஏற்பட்ட போது வீட்டில் இருந்தவர்கள் கூச்சலிட்டதையடுத்து, அயலவர்கள் ஓடி வந்து ஏனைய வீடுகளுக்குத் தீ பரவாமல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

முற்றாக எரிந்த வீட்டில் பெருமளவிலான வீட்டு உபகரணங்கள், பெறுமதியான ஆவணங்கள், தங்க நகைகள், உடுதுணிகள் எனப் பெருமளவிலான பொருள்கள் தீக்கிரையாகியுள்ளன.

இதேவேளை இது தொடர்பாக டயகம பொலிஸ் நிலையத்துக்கும், தோட்ட நிர்வாகத்துக்கும் பிரதேச வாசிகளால் தகவல் அளிக்கப்பட்டுள்ளது.

அதன்பின் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் தீ பரவலுக்கான காரணங்களைக் கண்டறிய மேலதிக விசாரணகளை மேற்கொண்டு வருகின்றமையோடு, தோட்ட நிர்வாகம் இவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து வருகின்றது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.01.2022இல் வெளியிடப்பெற்றது.

# இ.போ.ச. முகாமையாளரை அவமதித்தமைக்கு அங்கஜன் எம்.பி. மன்னிப்புக்கோர வேண்டுமாம்

## போக்குவரத்து ஊழியர் சங்கம் போர்க்கொடி




(கலையமுதன்)
யாழ்ப்பாணம், ஜன. 28

இ.போ.ச. வடபிராந்திய முகாமையாளரை அவமதித்தற்கு, வடபிராந்திய தொழிலாளர்களிடம் அங்கஜன் இராமநாதன் எம்.பி.பகிரங்கமாக மன்னிப்புக் கோர வேண்டுமென இலங்கைப் போக்குவரத்து சபையின் வடமாகாண ஜனநாயகப் போக்குவரத்து ஊழியர் சங்கத் தலைவர் தெரிவித்தார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ்.மாவட்ட செயலகத்தில் வீதிப் பாதுகாப்பு தொடர்பான கலந்துரையாடலொன்று கடந்த ஜனவரி 25ஆம் திகதி இடம்பெற்றது. அதில் இ.போ.ச. வடபிராந்திய முகாமையாளரும் அழைக்கப்பட்டார். ஆனால், அக் கூட்டத்தில் சம்பந்தமில்லாத விடயம் கலந்துரையாடப்பட்டிருக்கின்றது.

தற்போது நடைமுறையில் இருக்கின்ற பிரச்சினை யாழ். மத்திய பஸ் நிலையத்துக்கு அருகில் பஸ் நிலையமொன்று கட்டப்பட்டது. இக் கலந்துரையாடலில், அங்கே செல்லும்படியாக முகாமையாளர் வற்புறுத்தப்பட்டுள்ளார். அதற்கான காணொலி ஆதாரங்களும் உள்ளன.

அங்கே, தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி அங்கஜன் இராமநாதன், முகாமையாளரை கடுமையாக அவமதித்தமை, ஒட்டுமொத்த வடபிராந்திய போக்குவரத்துத் தொழிலாளர்கள் மத்தியிலும் பெரும் சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது.

அக்கூட்டத்திலே, முகாமையாளருக்கு இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தியிருந்தார். அந்த அழைப்பை எடுத்துப் பேசுவதைக் கூடக் கண்டித்துள்ளார்.

நாங்கள் எத்தனையோ கூட்டங்களில் கலந்து கொள்கின்றோம். இன்றைய நடைமுறை சூழலில் ஒரு தொலைபேசி அழைப்பு வரும்போது, அது கதைப்பது இயல்பு. அதைக் கூட அவர் கண்டித்திருக்கின்றார்.

அதுமாத்திரமின்றி, பேருந்து நிலையப் பிரச்சினையை கொண்டு வந்து, நாங்கள் அங்கே செல்லவேண்டும் என்ற பிரச்சினையைக் கிளப்பி, அங்கே செல்லா விட்டால் பிறிதொரு முகாமையாளரை நியமித்து, இதை நான் செய்து காட்டுவேன் எனச் சொல்லி, அனைத்து தொழிற்சங்கங்களையும் அவமதித்துள்ளார்.

நேற்றைய கலந்துரையாடலில் தொழிற்சங்கங்களை அவர் அழைத்திருந்தார். அதிலே சுதந்திரக் கட்சியின் தொழிற்சங்கம் மட்டுமே சென்றிருந்தது. ஏனைய தொழிற்சங்கங்கள் செல்லவில்லை.

ஏனெனில் முகாமையாளருக்கே இந்த நிலைமை என்றால் எங்களுக்கு என்ன நிலைமை என்று தெரியாததால் நாங்கள் அந்தக் கூட்டத்திற்குச் செல்லவில்லை.

ஆகவே, அவரின் அதிகாரத்தைப் பிரயோகித்தமையானது, தொழிலாளர்கள் மத்தியில் சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளமையால், அவர் பகிரங்கமாக வடபிராந்திய தொழிலாளர்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும்.

வடபிராந்திய முகாமையாளரை நாங்கள் நியமிக்கும்போது, அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அவரின் நியமனத்தை நிறுத்தியிருந்தார். இதனால் வடக்கில் பல தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருந்தார்கள்.

வடபிராந்தியத்தில் ஒவ்வொரு சாலையிலும் ஆளணிப் பற்றாக்குறை, பேருந்துப் பற்றாக்குறை போன்ற பல பிரச்சினைகளை எதிர்நோக்கும் நேரத் தில் மும்மொழிகளும் தெரிந்த முகாமையாளரை நியமித்த போது அவர் அதை இடைநிறுத்தினார்.

பின்னர் நாங்கள் ஒரு போராட்டத்தை ஏற்பாடு செய்த போது, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதிமொழி தந்த தன் பிற்பாடே போராட்டம் கைவிடப்பட்டது. குறித்த முகாமையாளர் வந்த பிற்பாடு மேன்முறையீட்டு சபை உட்பட தொழிலாளர்களின் பல பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன.

இலங்கைப் போக்குவரத்து சபையில் நிறைய பிரச்சினைகள் இருக்கின்றன. ஆனால் அவை தீர்க்கப்படவில்லை.

இப்போது எங்களுடைய தொழிலாளர்களின் வருமானம் யாழ் பஸ் நிலையத்தில்தான் தங்கியுள்ளது. மக்களுக்கு சேவை செய்ய நாங்கள் தயார்.

ஆனால், தரப்படுகின்ற பேருந்து நிலையங்களை எங்களுக்கு இரண்டாகப் பிரித்து, ஒரு கட்டமைப்புடன் எங்களுக்குத் தர வேண்டும். அதுதான் எங்களுடைய கோரிக்கை.

இன்று எத்தனையோ கோடி ரூபா செலவில் வவுனியா பேருந்து நிலையம் கட்டப்பட்டுள்ளது. ஆனால், சேவையாற்றுகின்ற அனைத்துப் பேருந்துகளும் அந்த நிலையத்திற்குள் செல்வதில்லை.

இதனால், பொதுமக்கள், கர்ப்பிணிகள், பாடசாலை மாணவர்கள், வயோதிபர்கள் வெயிலிலும், மழையிலும், பனியிலும் நின்று பயணம் செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

வவுனியா பஸ் நிலையமும் எங்களுக்கு இரண்டாகப் பிரித்து தரப்படும், நீங்கள் சிறப்பாக சேவை செய்யலாம் என்று சொல்லியும், அதற்காக நீதிமன்ற உத்தரவும் இருந்தும், அதற்கான தீர்வு இன்று வரை நிறைவேற்றப்படவில்லை.

அதேபோல், மன்னார் பேருந்து நிலையமும் எங்களிடம் இருந்து பறிக்கப்பட்டு விட்டது. அதற்கான தீர்வும் இன்று வரை எட்டப்படவில்லை.

இலங்கைப் போக்குவரத்து சபை பேருந்துகளுக்கு எத்தனையோ தடவை கல்லெறிந்து தாக்கியிருக்கின்றார்கள். இதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? எந்தவித நடவடிக்கையும் இது வரை எடுக்கப்படவில்லை.

இந்தப் போக்குவரத்து நிலையத்திற்கு நாங்கள் போகத் தயார். ஆனால், மாகாணங்களுக்கான சேவைய்சி மட்டும்தான் அதிலே செயற்படுத்த முடியும்.மேலும், அந்த பேருந்து நிலையம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, இலங்கைப் போக்குவரத்து சபைக்கு கையளிக்கப்பட்டால் மாத்திரமே அந்த பேருந்து நிலையத்திற்கு செல்ல முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம். – என்றார்.

# வடக்கிலும் தொற்றுத் தீவிரம்

(கலையமுதன், எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், ஜன. 29

வடக்கு மாகாணத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக தெரிவித்துள்ள வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்வைத்தியகலாநிதிஆ.கேதீஸ்வரன், குறிப்பாக கடந்த இரண்டு வாரங்களில் 4 கொரோனா உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன என்றார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்களுக்குக் கருத்து தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கு மாகாணத்தில் கடந்த இரண்டு வாரங்களில் தொற்றாளர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்துச் செல்வதை அவதானிக்க கூடியதாகவுள்ளது.

கடந்த டிசம்பர் மாதத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் நோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். ஜனவரி மாதம் நேற்று முன்தினம் வரை வடக்கு மாகாணத்தில் 726 நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

நாளொன்றுக்கு 10 பேர் மட்டும் இனங்காணப்பட்டு வந்த நிலையில் தற் போது நாள் ஒன்றுக்கு தினமும் 60 தொடக்கம் 70 பேர் கொரோனா தொற் றாளர்களாக இனங்காணப்படுகின்றார் கள்.

ஒமிக்ரோன் தொற்று உலக நாடுகளில் தீவிரமாகப் பரவி வருகின்றது இந்த சூழ் நிலையில் எங்களுடைய நாட்டில் தற் போது மேல் மாகாணத்திலும் மேலும் பல மாகாணங்களிலும் அது வேகமாக பரவி வருகின்றது. வடக்கு மாகாணத்திலும் அது வேகமாக பரவ ஆரம்பித்துள்ளது. பொதுமக்கள் தங்களை பாதுகாத்து கொள்ள வேண்டும்.

இந்த சூழ்நிலையிலிருந்து தப்பித்துக் கொள்ள இருக்கின்ற ஒரே ஒரு பாதுகாப்பான விடயம் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதுதான். முதல் இரண்டு தடுப்பூசியைப் பலரும் பெற்ற போதிலும் மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசியைப் பெறாமையின் காரணமாக நோய் எதிர்ப்பு சக்தி அற்ற நிலையில் வேகமாக கொரோனா நோய் தொற்றகூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன. – என்றார்.

# முதலமைச்சர் பதவிக் கதிரைக்கு நாங்கள் ஆசைப்படவேயில்லை!

## சட்டத்தரணிகள் சுகாஸ், காண்டீபன் தெரிவிப்பு



(கலையமுதன்)
யாழ்ப்பாணம், ஜன. 29

முதலமைச்சர் கதிரைக்கு தாங்கள் ஆசைப்படவில்லை எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்டத்தரணிகள் காண்டீபன் மற்றும் சுகாஸ் ஆகியோர் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற 13 ஆவது திருத்தத்திற்கு எதிரான வாகன ஊர்தி பிரசாரத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில் –

அரசியல் கோமாளிகளின் 13 ஆவது திருத்த நாடக நிகழ்ச்சி நிரலில், மக்களே நீங்கள் ஏமாற வேண்டாம்.தமிழ் மக்களின் ஆணையை பெற்றவர்கள் என்று கூறும் சிலர் இன்று 13ஐ கையிலே எடுத்து ஜனநாயகத்தை புதைத்துக் கொண்டு இருக்கின்றனர்.

அவர்களுக்கு நாம் பதிலடி கொடுக்க வேண்டும். இது முன்னணியின் போராட்டம் அல்ல. தமிழ் மக்களின் போராட்டம். நாம் முதலைமச்சர் கதிரைக்கு ஆசப்படவில்லை. மக்களோடு மக்களாக நிற்கத் தான் நாம் விரும்புகின்றோம்.

2013 ஆம் ஆண்டு தொடக்கம் முதலமைச்சர் கதிரையை தேய்த்து, ஒன்றுமே செய்யாத விக்னேஸ்வரன், மக்கள் விருப்பப்பட்டால் மீண்டும் வருவேன் எனக் கூறிக்கொண்டு இருக்கின்றார். நாடாளுமன்றில் அவரால் ஒன்றும் பேச முடியவில்லை. ஏனென்றால் அங்கே சிங்கள மக்கள் அதிகம் உள்ளனர். அதனால் அவர் பேச மாட்டார்.

முதல் பொங்கலுக்கு தீர்வு வரும் என சம்பந்தன் ஐயா கூறிக்கொண்டிருந்தார். இப்போது சுமந்திரன், சுரேஷ் பிறேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கூறுகின்றனர். இவர்களின் பம்பல் கதைகளுக்கு பதில் சொல்வதற்கு நேரமில்லை. நாம் கொள்கை உடையவர்கள். இவர்களின் கேள்விகளுக்கு பின்னர் பதில் கூறுகின்றோம். என்றனர்.

# ஜெயராஜ் பங்குபற்றும் வழக்காடுமன்றம் இன்று

அகில இலங்கைக் கம்பன் கழகமும் ஆஸ்திரேலியக் கம்பன் கழகமும் இணைந்து நடத்தும் முந்துதமிழ் எனும் மாதாந்த இயலரங்கின் ஜனவரி மாத நிகழ்வு இன்று 29ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு (இலங்கை நேரம்) நிகழ்நிலை நிகழ்வாக நடைபெறும்.

இந்நிகழ்வு, வெள்ளவத்தை ஸ்ரீ ஐஸ்வர்யலஷ்மி ஆலய பிரதம சிவாச்சாரியார் தர்ன் குருக்களின் மங்கல ஆரத்தியோடு இனிதே ஆரம்பிக்க உள்ளது.

இந்நிகழ்வின் சிறப்பு அம்சமாக, ‘குற்றக் கூண்டில் சமகாலப் படைப்பாளிகள்’ எனும் பொருளிலான வழக்காடு மன்றம் நிகழவுள்ளது. இதன் தகை சார் நீதியரசராக கம்பவாரிதி இ.ஜெயராஜ் கலந்து கொண்டு சிறப்பிக்கவிருக்கிறார். வாதிகளாக தமிழ் நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் இரா.மாது, எழுத்தாளர் ஞானம் பாலச்சந்திரன் ஆகியோர் குற்றத்தைச் சுமத்தவுள்ளனர். பிரதி வாதிகளாக தமிழ் நாட்டைச் சேர்ந்த வழக்கறிஞர் கே.சுமதி, எழுத்தாளர் வசந்தி தயாபரன் ஆகியோர் விவாதிக்கவுள்ளனர்.

நிகழ்நிலையாக அமைய இருக்கும் இந்நிகழ்வை அனைவரும் கண்டுகளித்து பயன் பெறலாம்.

ஒவ்வொரு மாதமும் நிறைவுச் சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு முந்து தமிழ் நிகழ்வு இடம்பெறும்.

AKILA ILANGAI KAMBAN KAZHAGAM
KAMBAN KAZHAGAM AUSTRALIA
எனும் யூடியுப் முகவரிகளிலும் –
KAMBAVARITHY ILANKAI JEYARAJ
KAMBAN KAZHAGAM AUSTRALIA
எனும் போஸ்புக் முகவரிகளிலும் பார்த்து மகிழலாம்.
இணையவழி நேரலையாக –
AKILA ILANGAI KAMBAN KAZHAGAM
KAMBAN KAZHAGAM AUSTRALIA
எனும் யூடியுப் முகவரிகளிலும் –
KAMBAVARITHY ILANKAI JEYARAJ
KAMBAN KAZHAGAM AUSTRALIA
எனும் போஸ்புக் முகவரிகளிலும் பார்த்து மகிழலாம்.
இணையவழி நேரலையாக

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கைத் தமிழ் மக்களின் அரசியற் தீர்வை 13இற்குள் முடக்கும் முயற்சியைத் தடுப்போம்

## தமிழ் சிவில் சமூக அமையம் விளக்கமான அறிக்கை

13ஆம் திருத்த விவகாரத்தை ஒட்டி தமிழ் சிவில் சமூக அமையம் வெளியிட்ட அறிக்கையின் விவரம் வருமாறு:-

13 ஆம் திருத்தத்துக்குள் தமிழ் மக்களின் அரசியற் தீர்வை முடக்கும் சூழ்ச்சியைத் தடுப்போம்.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைக்கான தீர்வை சிறிலங்காவின் அரசியல் யாப்பின் 13ஆவது திருத்தத்திற்குள் முடக்கும் முயற்சி அண்மைக்காலமாக தீவிரமடைந்துள்ளது.

தொடர்ந்து வரும் சிங்களப் பேரினவாத அரசுகளால் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டமைக்கப்பட்ட இனவழிப்பானது பல்வேறு முனைகளிலிருந்தும், பல்வேறு வடிவங்களில் நிகழ்த்தப்பட்டு வருகின்றது. இவ்வாறு தொடரும் இனவழிப்பிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு உள்ள ஒரே வழி சுயநிர்ணய அடிப்படையிலான அரசியல் தீர்வு ஒன்றே எனத் தமிழர்கள் ஏழு தசாப்தங்களுக்கு முன்னரே ஏற்றுக் கொண்டுள்ளனர்.

அந்தவகையில் முக்கிய நிகழ்வுகளாக தமிழ் மக்களின் இறைமையையும் சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரிக்கக் கோரிய வட்டுக்கோட்டைப் பிரகடனம், அதன் மேலான ஆணையாக அமைந்த 1977 ஆம் ஆண்டின் பொதுத் தேர்தல் முடிவுகள், திம்புப் பிரகடனம், பொங்கு தமிழ்ப் பிரகடனம், 2000 ஆம் ஆண்டின் பின் இலங்கையில் நடந்த சகல தேர்தல்களிலும் தமிழ் மக்கள் ஒற்றையாட்சிக்குட்பட்ட எந்த ஒரு தீர்வையும் நிராகரித்தும் இறைமையுள்ள மக்கள் என்ற வகையில் சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான தீர்வைக் கோரியும் மீள மீள வழங்கி வரும் ஆணைகள், எழுக தமிழ்ப் பேரணி, தமிழ் மக்கள் பேரவை முன் வைத்த தீர்வுத் திட்டம், இறுதியாக பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை பேரணியின் பிரகடனம் வரை தமிழ்த் தேசியக் கட்சிகளும் தமிழ் சிவில் சமூக அமைப்புகளும் தமிழ் மக்களும் அரசியல் வேணவாவாக வெளிப்படுத்தி வருவது சுயநிர்ணய அடிப்படையிலான அரசியல் தீர்வே தேவை என்பதே. மாறாக 13 ஆம் திருத்தமோ, அதன் வழியான மாகாண சபை முறைமையோ, ஒற்றையாட்சி வரையறைக்குள் அடங்கிய நிர்வாகப் பரவலாக்கம் மட்டுமே என்பதனால் தமிழ் மக்கள் அவற்றை ஏற்றதில்லை.

மாகாண சபைகள் முறைமையானது 1987 இன் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கை அரசியல் யாப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் கொண்டுவரப்பட்டது. இச்சட்டமூலம் அறிமுகப்படுத்தப்பட்ட காலந்தொட்டே தமிழ்த் தேசியத்தை தமது உறுதியான கொள்கையாக வரித்துக் கொண்டதனால் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கான தீர்வாக சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான தீர்வே தேவை எனப் போராடி வருகின்ற எந்தவொரு கட்சியோ அல்லது இயக்கமோ 13 ஆவது திருத்தச் சட்டத்தையும் அதன் வழி வந்த மாகாணசபை முறைமையையும் தீர்வாகவும், தீர்வுக்கான ஆரம்பப் புள்ளியாகவும், ஏற்றுக் கொண்டதுமில்லை; அதை முன்வைத்து வாக்குப் பெற்றதுமில்லை.

இலங்கையை சீனாவின் ஆதிக்கத்தில் இருந்து அகற்றி மீள இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் வழியே தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்த இந்தியா விரும்புகின்றது. அதற்காக தமிழ் மக்களையும் அவர்களைப் பிரதித்துவப்படுத்தும் கட்சிகளையும் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை அரசமைப்புடன் பிணைக்கும் 13ஆம் திருத்தத்தை உயர்த்திப் பிடிக்கச் சொல்லி இந்தியா அழுத்தம் கொடுக்கிறது. அண்மையில் இந்தியப் பிரதமருக்கு பல தமிழ் கட்சிகள் இணைந்து எழுதிய கடிதத்தின் பின்புலம் இதுதான்.

இந்தியா சீனாவுடனான போட்டியில் தமிழர்களை பாவிக்க முனைவது எமக்கு ஓர் வாய்ப்பை வழங்குகின்றது. ஆனால் அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி நாம் இந்தியாவிடம் நிரந்தர தீர்வை – சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டியை வலியுறுத்த வேண்டுமேயன்றி உப்புச் சப்பில்லாத 13ஆம் திருத்தத்தை அல்ல.

தமிழ் மக்களை 13ஆம் திருத்தத்தை ஏற்றுக் கொள்ள வைத்துவிடுவதன் மூலம் இந்திய – இலங்கை ஒப்பந்தத்தில் தன்னுடைய கடப்பாட்டை நிறை வேற்றியதாகக் கூறி இலங்கையில் தனது செல்வாக்கை, கட்டுப்பாட்டை மீள உறுதிப்படுத்தலாம் என இந்தியா எதிர்பார்க்கின்றது.

அதேவேளை, ஒற்றையாட்சியை வலியுறுத்தும் உறுப்புரையைக் கொண்டுள்ள இரண்டு குடியரசு (1972 மற்றும்1978) யாப்புகளையும் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதுடன் அவை தமிழர்களைப் புறந்தள்ளியே உருவாக்கப்பட்டன. யாப்புகளின் உருவாக்கத்தின் போது தமிழ்த் தலைமைகள் முன்வைத்த கோரிக்கைகள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டதாலும், இறுகிப்போன அவற்றின் ஒற்றையாட்சித் தன்மையாலும் தமிழர்கள் அவற்றை ஏற்கவில்லை. தமிழ்த் தலைமைகள் எடுத்த இந்த நிலைப்பாடு, தமிழ் மக்களின் சுயநிர்ணய அடிப்படையிலான உரிமைக் கோரிக்கைக்கு வலுச் சேர்க்கும் ஒன்றாக இன்றும் விளங்கி வருவதை இலங்கை அரசும் அறியும்.

தற்போது 4 ஆவது அரசியல் யாப்பை உருவாக்க சிங்கள தேசம் முனைந்து நிற்கின்றது. சிங்கள, பௌத்த பேரினவாதமானது அதிகளவு வீரியமான பேரினவாதக் கூறுகளையும் வலுவான ஒற்றையாட்சிப் பண்புகளையும் இதில் உள்ளடக்க எதிர்பார்க்கின்றது

தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு வழங்காத இந்த யாப்பைக் கொண்டு வரும் போது தமிழ்த்தலைமைகள் அதனை ஏற்றுக் கொள்ளாத நிலை ஏற்படும் என்பதை இலங்கை அரசும் அறியும். அதன் மூலம் தமிழர்கள் தமக்கான ஓர் அரசியல் தீர்வைக் கோருவதற்கான நியாயம் என்றாவது உலகால் அங்கீகரிக்கப்படலாம் என சிங்களப் பேரினவாதம் தெரிந்து வைத்துள்ளது. அதனை இலங்கை விரும்பவில்லை. முன்மொழியப்படும் புதிய 4 ஆவது அரசியல் யாப்பில் அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டமைக்கப்பட்ட இனவழிப்பிலிருந்து தமிழ் மக்களை பாதுகாக்க முடியாததும் ஒற்ஷ்யாட்சியின் பண்புகளை மீறாததுமான மாகாண சபை முறைமைய தற்போதைய வடிவிலோ அல்லது மேலும் நீர்த்துப்போன வடிவிலோ பேணுவதன் மூலம் புதிய 4 ஆம் அரசியல் யாப்புக்கான வாக்கெடுப்பின் போது தற்போதைய நாடாளுமன்றத்தில் உள்ள வடக்கு – கிழக்கின் தமிழ்த் தேசியக்கட்சிப்பிரதிநிதிகளின்பெரும்பான்மை ஆதரவை பெற்றுவிடுவதற்கான எதிர்பார்ப்புகளுடன் அரசு தனது வியூகத்தை ஆரம்பித்துள்ளது. அது நடந்துவிட்டால் இறுதியில் தமிழ் மக்களும் ஒற்றையாட்சி அரசியல் யாப்பை ஏற்றுக் கொண்டு விட்டார்கள் என்பதை உலகுக்கு கூற முடியும்.

புதிய 4 ஆம் ஒற்றையாட்சி அரசியல் யாப்பை தமிழ்த் தேசியக்கட்சிகளை ஆதரிக்க வைப்பதன் மூலம் தமிழ் மக்களையும் இலங்கையின் ஒற்றையாட்சியை ஏற்றுக் கொள்ள வைத்துவிட்டோம், அவர்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையைக் கைவிட வைத்து மாகாண சபை முறையை ஏற்றுக் கொள்ள வைத்துவிட்டோம் என சிறீலங்கா அரசிடம் கூற இந்தியா ஆவலாக உள்ளது.

அதன் மூலம் இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் படி இலங்கை தனது ஆள்புலத்தில் இந்திய நலன்களுக்கு விரோதமான சக்திகளை அனுமதிக்கக் கூடாது எனக் கோர முடியுமெனவும் அதற்கு இலங்கை செவிசாய்த்து நடக்கும் எனவும் இந்தியா நம்புகின்றது.

இத்தகைய களப் பின்னணியில் வைத்தே அண்மையில் தமிழ்த் தேசியக் கட்சிகள் பலவும் இணைந்து 13 ஆம் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த நடவடிக்கை எடுங்கள் என இந்திய அரசைக் கோரி கடிதம் எழுதியதை நாம் பார்க்க வேண்டும்.

தமிழ்க்கட்சிகள் முன்னெடுத்த இந்த முயற்சி 13 ஆம் திருத்தச் சட்டம் என்ற பயனற்றதும் ஒரு தேசமாக அணிதிரள்வதற்கான எமது அரசியல் அடையாளத்தை அழிக்கும் நிலையை ஏற்படுத்துவதுமான சூழ்ச்சி ஒன்றுக்குள் எம்மை முடக்கும் என்பதை முன்னுணர்ந்ததாலேயே தமிழ் சிவில் சமூக அமையம் (TCSF) உட்பட 11 தமிழ் சிவில் சமூக அமைப்புகளால் அந்த முயற்சியைக் கைவிடக் கோரி '13ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தக் கோருதல் எமக்கான அரசியல் தீர்வுமல்ல, வாக்களித்த மக்களின் கோரிக்கையுமல்ல' என்ற அறிக்கை வெளியிடப்பட்டது. ஆனாலும் தமிழ்க் கட்சிகள் சிவில் சமூகத்தின் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை.

13 ஆம் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த நடவடிக்கை எடுங்கள் என இந்திய மத்திய அரசைக் கோரியுள்ள தமிழ்த் தேசியக் கட்சிகள் இலங்கையின் புதிய 4 ஆன் அரசியல் யாப்பில் 13 ஆம் திருத்தத்தை ஒத்த சரத்துகள் – அதாவது மாகாண சபை முறைமை உள்ளடக்கப்படும் போது – எவ்வாறு முடிவெடுக்கப் போகின்றன என்ற அச்சம் தமிழ் மக்களிடம் உருவாகத் தொடங்கியுள்ளது.

இன்று 13 ஆம் திருத்தத்தை முழுமையாக அமுலாக்குமாறு கோருபவர்களால் ஒற்றையாட்சிப் பண்பைக் கொண்டிருக்கும் – தமிழ் மக்களின் மேலாக நடைபெறும் கட்டமைக்கப்பட்ட இனவழிப்பை சட்டபூர்வமாக்கி முழுமையடையச் செய்யவுள்ள – 4 ஆவது அரசியல் யாப்பை எதிர்த்து வாக்களிக்க முடியுமா என்றும் எப்போதும் தமிழர்களின் (ஈழம் மற்றும் மலையகத் தமிழர்கள் இருதரப்பினதும்) நலன்களை தனது நலன்களுக்காக பலியிட்டு வரும் இந்தியா அதற்கு அனுமதிக்குமா என்றும் தமிழ் மக்கள் அச்சமடைகின்றார்கள்.

இத்தகைய சூழ்நிலையில் தமிழ்ப் பொதுமக்களாகிய நாமே நேரடியாக 13 ஆம் திருத்தத்தையும், அதன் வழி அமைந்த மாகாண சபை முறைமையையும் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கான தீர்வாக ஏற்க மாட்டோம் என மீண்டும் வெளிப்படுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளது. இன்றும் கூட சுயநிர்ணய அடிப்படையிலான ஒரு கூட்டாட்சித் தீர்வையே தமிழ் மக்கள் தமது அரசியல் தீர்வாக வேண்டி நிற்கின்றனர் என்பதை மக்களாகிய நாமே முன்வந்து நேரடியாக பிரகடனம் செய்ய வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

எமது அரசியல் அபிலாசைகளையும் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையையும் தனது நலன்களுக்கான இராஜதந்திரப் போட்டியில் பகடைக்காயாகப் பாவிப்பதற்கு இந்தியாவுக்கோ, புரிந்தோ புரியாமலோ அவர்களின் வலையில் வீழ்ந்து, 13ஆம் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தக் கோரியுள்ள தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கோ உரிமையில்லை என்பதையும் தமிழ் மக்கள் தமது எழுச்சிகள் மூலமே வலியுறுத்த முடியும்.

13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுலாக்கக் கோருதல் என்ற உருமறைப்பில் தமிழ் மக்களின் இருப்பிற்கு எதிராக எழுந்துள்ள இப்பெரும் அச்சுறுத்தலை வெற்றி கொள்ள தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் தமிழகத்திலும் உள்ள தமிழ் மக்கள் பெருமளவில் எழுச்சிகொண்டு 13 ஆம் திருத்தத்தை அரசியல் தீர்வாக ஏற்கமாட்டோம், இறைமையுள்ள மக்கள் என்ற அடிப்படையில் எமக்குள்ள சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அமையும் ஓர் அரசியற் தீர்வையே கோரி நிற்கின்றோம் என்பதை மீளவும் வலியுறுத்துவதே எம் முன்னாலுள்ள ஒரே வழியாகும்.

# கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் மாணவருக்கு 1 வார திடீர் விடுமுறை

## கொவிட் தொற்றுப் பரவல் நிலைமையை அடுத்து

யாழ்ப்பாணம், ஜன. 29

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் கல்வி பயிலும் பத்திற்கும் மேற்பட்ட ஆசிரிய மாணவர்களுக்கும் விரிவுரையாளர் ஒருவருக்கும் கொவிட் தொற்று நிலைமை ஏற்பட்டமையைத் தொடர்ந்து கலாசாலையின் நேரடிக் கற்றல் செயற்பாடுகளை ஒரு வாரத்திற்கு இடை நிறுத்துமாறு மத்திய கல்வி அமைச்சுச் செயலாளர் கலாசாலை அதிபருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

கடந்த ஜனவரி 18 ஆம் திகதி கலாசாலையின் கற்றல் செயற்பாடுகள் மீள ஆரம்பமாகிய நிலையில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் 300 ஆசிரிய மாணவர்கள் கலாசாலைக்கு வருகை தந்தனர். அவர்களில் ஒருவர் திடீரெனச் சுகவீனமுற்றமையைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையின் அடிப்படையில் கொரோனா தொற்றைக் கொண்டுள்ளார் என உறுதி செய்யப்பட்டார். அதனைத் தொடர்ந்து வந்த நாள்களில் ஆசிரிய மாணவர்களில் கொவிட் அறிகுறிகள் தென்பட்டவர்கள் தாமாகவே வைத்தியசாலை சென்று மேற்கொண்ட அன்ரிஜன் பரிசோதனையின் அடிப்படையில் பத்துக்கும் மேற்பட்டோருக்கு கொவிட் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது.

தற்போது முந்நூறு வரையான ஆசிரிய மாணவர்கள் கற்கும் சூழலில் வகுப்பறை நேரடிக் கற்றல் செயற்பாடுகளின் ஊடாகக் கொவிட் பரவல் ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு எதிர்வரும் 31 ஆம் திகதி முதல் பெப்ரவரி 06 ஆம் திகதி வரை கலாசாலையின் நேரடிக் கற்றல் செயற்பாடுகளை இடைநிறுத்துமாறும் இணையவழியில் போதனைகளை மேற்கொள்ளுமாறும் கல்வி அமைச்சுச் செயலாளர் அறிவுறுத்தியுள்ளார்.